அக்டோபர் 2007 October | இதழ் 201 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION















Growing
with the
Community
ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

17 வது ஆண்டில்
th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**தொலைபேசி**
**416 920 9250**
**தொலைநகல்**
416 921 6576

**மின்னஞ்சல்**
**tamilsinfo@sympatico.ca**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**விநியோக முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

# தமிழர் பிரதிநிதித்துவம்

*ஒன்ராறியோ மாகாணத்துக்கான அடுத்த அரசாங்கத்தைத் தெரிவதற்கும், நான்காண்டுகளுக்குப் பின்னர் நடைபெறவுள்ள ஒன்ராறியோ தேர்தலை எந்த அடிப்படையில் நடத்துவது என்பதைத் தீர்மானிப்பதற்கும் இந்த மாதம் பத்தாம் திகதி நாங்கள் வாக்களிக்கப் போகின்றோம். இதனால் இந்தத் தேர்தல் வரலாற்றில் முக்கியமானதாகியுள்ளது. மாகாணத் தேர்தலில் நான்கு தமிழர்கள், நான்கு தொகுதிகளில் கட்சிகளின் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதும் ஒரு வரலாறுதான். இந்தத் தேர்தலில் தமிழர்களாகிய நாங்கள் என்ன செய்ய வேண்டும்? வாக்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும்? சிலரது குதர்க்கமான செயற்பாடுகளால் தமிழ் மக்கள் குழம்பிப் போயுள்ளதைக் காணமுடிகின்றது. வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு தமிழரும் தவறாமல் வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டும். இது முதலாவதும் முக்கியமானதும ஆகும். கனடியப் பிரஜாவுரிமை தரும் மூன்று உரிமைகளில் ஒன்று, தேர்தலில் பங்கு பற்றுவது. அதாவது, தேர்தலில் வாக்களிப்பதும், தேர்தலில் போட்டியிடுவதும் என்பது. ஆதலால், தவறாமல் ஒவ்வொருவரும் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். அடுத்ததாக, தமிழர்கள் போட்டியிடும் தொகுதிகளில் தமிழர்களுக்கே வாக்களிப்பது என்று உறுதி எடுக்க வேண்டும். அகதிச் சமூகத்தை அதிதிச் சமூகமாக்குவது இந்த வாக்குகளிலேயே தங்கியுள்ளது. தமிழர் போட்டியிடாத தொகுதிகளில், பொதுச்சேவை நோக்குக் கொண்ட பொருத்தமானதும் தமக்கு விருப்பமானதுமான அபேட்சகருக்கு தமது தெரிவுக்கு ஏற்ப வாக்களிக்கலாம். ஸ்காபரோ-கில்ட்வூட் தொகுதியில் நீதன் சண்முகராஜா போட்டியிடுகின்றார். இவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்திருப்பதாக என்.டி.பி தலைமைப்பீடம் கணிப்பிட்டுள்ளது. இதனால் கட்சியின் மாகாணத் தலைவர் ஹொவார்ட் ஹாம்ப்டனும், கட்சியின் தேசியத் தலைவர் ஜாக் லேட்டனும் நேரடியாகத் தொகுதியில் இறங்கி ஆதரவுப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். பெருமளவிலான கனடியர்களும், வேற்றின மக்களும் தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். தன்னார்வத் தமிழ்த் தொண்டர் குழாம் வெற்றிக்கான வாய்ப்பைப் பழமாக்கிட இரவு பகலாக முயன்று கொண்டிருக்கின்றது. கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சரியாக பனைப்படுத்தினால் பலன் கிடைக்கும். தவற விட்டால் சிதறிய பால் ஆகும். நீதனின் வெற்றி தமிழரின் வெற்றி என்போம்; தொழிலாளர் வெற்றி என்போம்; ஒடுக்கப்பட்ட-நசுக்கப்பட்ட மக்களின் வெற்றி என்போம். இளைய தலைமுறையிடம் எங்கள் தலைமையைக் கையளிப்போம்! அதன் வழிநடத்தலில் நாம் சுபீட்சம் காண்போம்! சிந்திப்போம்! செயற்படுவோம்!*

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

# பதினேழாவது ஆண்டு பூர்த்தி மலர்

தமிழர் தகவலின் பதினேழாவது ஆண்டு பூர்த்தி மலர் வேலைகள் ஆரம்பமாகிவிட்டது.

இதுவரை எட்டுக் கட்டுரைகள் எமக்குக் கிடைத்துள்ளன.

2007 நவம்பர் மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை வரை கட்டுரைகளை அனுப்பி வைக்கலாம்.

தமிழ்க் கட்டுரைகள் கடதாசியில் எழுதப்படுபவையாயின் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும், கணினியில் அச்சடிக்கப்பட்டதாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

கடதாசியின் ஒரு பக்கத்தில் மட்டுமே இவை எழுதப்பட வேண்டும்.

கனடிய வாழ்க்கையின் அனுபவங்கள், கனடிய வாழ்வுக்குத் தேவையான விடயங்கள், கனடியக் கல்வி, பெற்றோரியம், சட்டம் ஒழுங்கு. புகலிட இலக்கியம், ஊடகத்துறை போன்ற தகவல்களைக் கொண்டதாக கட்டுரைகள் அமையலாம்.

தபாலில் அனுப்பும்போது பிரதி ஒன்றினை உங்களுடன் வைத்திருக்கவும்.

தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி:
17th Anniversary Issue.
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario
M4Y 2L4.

மேலதிக தகவல்கள் தேவையாயின் 416 920 9250 இலக்கத்துடன் பிற்பகல் வேளயில் தொடர்பு கொள்ளவும்.

### வருட இறுதிக்குள்
### மீண்டும் ஒரு பொதுத் தேர்தல்!
## நாடாளுமன்றம் இம்மாதம் கலைக்கப்படும்?

இந்த மாதம் பத்தாம் திகதி ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுகின்றது. கடந்த தேர்தல்களில் 103 தொகுதிகளாகவிருந்த ஒன்ராறியோ மாகாண சபைக்கு, இம்முறை மத்திய அரசின் தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் 107 தெகுதிகளுக்குத் தேர்தல் நடைபெறுவது கவனிக்கப்பட வேண்டியது.

இதனால், எந்தவொரு கட்சியாவது அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வர வேண்டுமானால், ஆகக்குறைந்தது 54 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். அநேகமாக அவ்வாறான வாய்ப்பு எந்தவொரு கட்சிக்கும் கிடைக்காது போகலாமென்று இது வரை வெளியான கணிப்புகள் தெரிவிக்கின்றன.

எனவே, சிறுபான்மை அரசொன்றே ஒன்ராறியோவில் பதவிக்கு வரக்கூடுமென்றும், அது என். டி. பி வெளியிலிருந்து வழங்கும் ஆதரவிலேயே தங்கியிருக்க நேருமென்றும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது. ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் கட்சியும் கடந்த இருபது மாதங்களாக இவ்வாறான சிறுபான்மைப் பலத்துடனேயே மத்திய அரசில் ஆட்சி புரிந்து வருகின்றது. ஆகக்கூடியது ஒரு வருடத்துக்கு மட்டுமே ஹாப்பர் அரசு ஆட்சியிலிருக்குமென்று பலரும் 'சோதிடம்' கூறினராயினும், அந்தக் 'கண்டம்' தாண்டி விட்டது.

ஆனால், இப்போது வரும் செய்திகள், இந்த மாதத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனவும், இவ்வருட இறுதிக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்றும் தெரிவிக்கின்றன.

இந்த மாத நடுப்பகுதியில் புதிய வரவு செலவுத் திட்டம் தாக்கலாவதை அடுத்து, நாடாளுமன்றம் கலைக்கப்படுமென்று பிரதமர் ஹாப்பர் அறிவித்துவிட்டார். எனவே, பொதுத் தேர்தல் வருட இறுதிக்குள் நடைபெறுவது நிச்சயமாகின்றது.

இவ்வருட ஆரம்பத்திலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டதாயினும், அது நடைபெறவில்லை. எதிர்க்கட்சிகளில் ஒன்று கூட உடனடியாகத் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்காததே இதற்குக் காரணம்.

அண்மையில், கியுபெக் மாகாணத்தில் மூன்று தொகுதிகளில் நாடாளுமன்றத்துக்கான இடைத் தேர்தல் நடைபெற்றது. இவற்றுள் இரண்டில் கன்சர்வேடிவ்வும், ஒன்றில் என். டி. பியும் வெற்றி பெற்றன. என். டி. பி கைப்பற்றிய தொகுதி ஏற்கனவே லிபரலிடம் இருந்தது. கன்சர்வேடிவ் வெற்றி பெற்ற இரு தொகுதிகளும் முன்னர் புளொக் கியுபெக் வசமிருந்தவை.

இந்தத் தேர்தல் முடிவுகள், முக்கியமான ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. தோல்வியில் துவண்டுபோன புளொக் கியுபெக் கட்சி, இந்த மாதம் நடைபெறும் சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் தாம் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறிவித்தது.

லிபரல் தலைமையைத் தாம் ஏற்ற பின்னர் ஒரு தொகுதியில்கூட வெற்றிபெறாத நெருக்கடியில் சிக்கியிருந்த ஸ்ரேபோன் டியோன், அடுத்து என்ன என்பதைச் சரியாக சிந்திக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

என். டி. பி கட்சிக்கு கியுபெக்கில் முதலாவதாக ஒரு ஆசனம் கிடைத்ததை ஸ்டிபன் ஹாப்பர் பெரிதாகப் பார்க்க விரும்பவில்லை; அல்லது பெரிதாக காட்டிக் கொள்ளவில்லை.

இவ்வாறான பின்னணியில், நாடாளுமன்றக் கலைப்பினை பிரதமர் அறிவிக்க நேர்ந்தது. தனது அரசு வாக்கெடுப்பில் கவிழ்க்கப்படுவதை அவர் விரும்பவில்லை. அதனால் தாமாகவே கலைக்க முடிவெடுத்துள்ளார். ஆனாலும், மீண்டும் ஒரு சிறுபான்மை அரசே ஆட்சிக்கு வருமென்றும் ஹாப்பர் கூறியுள்ளது முக்கியமானது.

அதுவும், கன்சர்வேடிவ் கட்சியே ஆட்சிக்கு வருமென்றும் நம்பிக்கை தெரிவித்துள்ள இவர், தமது கட்சியினரைத் தேர்தல் பிரசாரத்துக்கு ஆயத்தமாகுமாறு அறிவித்துள்ளார். பிரசார பேருந்துகள் (பஸ்கள்) இரண்டு தயாராகி விட்டன. விளம்பரங்கள் ஒலி/ஒளிப் பதிவாகி வருகின்றன. மேலதிகமாகப் பத்து ஆசனங்களையாவது கைப்பற்றிவிட வேண்டுமென்பது ஹாப்பரின் இலக்கு. ஆனால், வாக்காளரின் விருப்பு எவ்வாறு இருக்குமோ தெரியாது!



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதானவர்களின் விழுகை!

டாக்டர் எம்.கே. முருகானந்தன்

அந்த முதியவர் வீட்டுக் காவலில் இருந்தார். அவரை வீட்டில் மடக்கி வைத்திருந்தது அரசாங்கமோ, காவல்துறையோ அல்ல! அவரது மகள் தான் வெளியே செல்லவிடாது வீட்டிற்குள்ளேயே இருக்கும்படி பார்த்துக் கொண்டாள். வயது 75 ஆகிவிட்டது. ரோட்டில் செல்லும் போது கல்லுத் தடக்கி விட்டாலோ, ஆட்டோ அல்லது வேறு வாகனம் தட்டி விட்டாலோ அவ்வளவுதான். எலும்பு முறிந்துவிடும். படுக்கையில் வைத்துத்தான் பார்க்க வேண்டும் என்பது அவளது கவலை. எவ்வளவு கவனம் எடுத்தும் அவர் விழுந்து இடுப்பு எலும்பை உடைக்கவே செய்தார். விழுந்தது வீதியில் அல்ல, வீட்டிற்குள் தான். கால்மிதி தடக்கி விழுந்து ஒடிந்தது.

பேராசிரியர் நந்தி ஒரு முறை என்னோடு நேரிற் பேசும்போது சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. 'முதுமை என்பது ஒருவர் தானே நடமாடித் திரியும் வரை பிரச்சனைக்குரியது அல்ல' உண்மைதான். படுக்கையில் கிடக்க நேரும்போதுதான் முதுமையானது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் வயதானவர்களை மோசமாகப் பாதிக்கிறது.
வயதானவர்கள் ஏன் விழுகிறார்கள்? வயதாகும் போது பார்வைத் திறன் குறைகின்றது. கேட்கும் திறன் மந்தமடைகின்றது. பாதங்களின் உணர்திறன் குறைவடைகிறது. இதனால் சமநிலை தளும்புகின்றது. அத்துடன் உடற் தசைகள் பலவீனம் அடைகின்றன. இவை யாவும் சிறிது தடக்கப்பட்டாலோ, சறுக்கினாலோ, சமநிலை தளும்பினாலோ இலகுவாக அவர்களை விழச் செய்துவிடுகின்றன.

விழுந்தால் எலும்புகள் முறிவடையக் கூடும். முக்கியமாக இடுப்பு எலும்புகள் முறிவடைவது வயதானவர்களை மிகவும் பாதிக்கும் விடயமாகும். அமெரிக்காவில் வருடாந்தம் 13,000 வயோதிபர்கள் வரை விழுவதால் ஏற்படும் மருத்துவப் பிரச்சனைகளால் மரணிக்கிறார்கள். விழுவது தொடர்பான மருத்துவச் செலவாக அமெரிக்க சுகாதார சேவைகளுக்கு வருடாந்தம் 20 பில்லியன் டாலர்கள் தேவைப்படுகின்றன. இத் தரவுகள் மூலம் வயோதிபர்களின் விழுகையால் தனிநபர்களுக்கும், சமூகத்திற்கும், அரசாங்கத்திற்கும் ஏற்படும் பளு தெளிவாகிறது அல்லவா? ஆயினும் விழுதல் என்பது வயோதிபத்தில் தவிர்க்க முடியாதது என்று கருதுவது தவறு. விழுந்து விடுவார்கள் என்ற பயத்தில் அவர்களது நாளாந்த செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது அதை விடத் தவறு. சுறுசுறுப்பாக இயங்கும் வயோதிபர்கள் விழுவது குறைவு என்றே மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

வருடாந்தம் 65 வயதிற்கு மேற்பட்ட 1.8 மில்லியன் வயோதிபர்கள் விழுதல் தொடர்பான காயங்களுக்காக அவசர சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறுவதாக வயதானவவர்களின் முறிவுகளுக்கு சிகிச்சை அளிக்கும் எலும்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் கூறுகிறார். 'வீட்டில் உள்ள மாடிப்படி, குளியலறை, நில விரிப்புகள் போன்ற வீட்டுப் பாவனைப் பொருட்களால் தான் இவை ஏற்படுகிறதே ஒழிய வீதியில் இல்லை' என்கிறார் அவர்.

**எனவே நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**
வீட்டை நன்றாக ஒளியூட்டி வையுங்கள். அதிக வெளிச்சமுள்ள, மேலிருந்து கீழே ஒளி விழக் கூடிய மின் விளக்குகளைப் பயன்படுத்துங்கள். இரவிலும் இரவு பல்புகளை ஒளிர விடுங்கள்.

வழுக்காத கால் மிதிகளைப் பயன்படுத்துங்கள். கார்பற், கம்பளம், நில விரிப்புகள் போன்றவை மடிந்து தடுக்கி விழாதவாறு அவற்றை தரையுடன் ஒட்டி வைத்திருங்கள்.

கொம்பியூட்டர், டெலிபோன் மற்றும் மின்சார வயர்களை நடக்கும் பாதைகளில் தடக்கவிடாது ஒதுக்கி வைத்திருங்கள். மாடிப்படிகளில் கை பிடித்து ஏறி இறங்குவதற்கு ஏதுவாக கைபிடிக் கம்பிகளைப் பதித்து வையுங்கள். அதே போல மலசல கூடம், குளியலறை ஆகியவற்றிலும் வழுக்காமல் நடப்பதற்கும், பிடித்து எழும்புவதற்கும் ஏதுவாகவும் கைபிடிக் கம்பிகளை பதிக்க வேண்டும்.

வயதானவர் படிக்கும் புத்தகங்களையும், சமையலறைப் பொருட்களையும் அவருக்கு இலகுவாக எட்டும் உயரத்தில் வைத்திருங்கள். உயரத்தில் ஏறிப் பொருட்களை எடுக்க முனைந்தால் அவர் தவறி விழுந்துவிடக் கூடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

(நன்றி: தினக்குரல், கொழும்பு)

# Standard Tamil fonts now available free

Standard Tamil fonts in TAM/TAB storage formats standardised by the Tamil Nadu Government can now be downloaded free from the state-owned Electronics Corp of Tamil Nadu Ltd (ELCOT) website (www.elcot.in).

Until now there were no standardised government Tamil fonts available in the freeware domain. The State Government had been buying Vanavil Software's proprietary fonts at a huge cost for over seven to eight years.

"ELCOT took the initiative to free Tamil fonts from a single vendor," Managing Director C Umashankar told *this website's newspaper*.

"The effort of ELCOT is to provide a set of freeware Tamil fonts meeting government standards for widespread use of Tamil computing in government departments, government websites, schools, colleges and e-governance applications," Umashankar said.

The use of TAM/TAB encoding format is expected to prevent inconsistencies in Tamil computing. ELCOT bought the interfacing for Tamil fonts in Linux and Windows applications from software developer Lastech Systems Pvt Ltd (LSPL) for Rs 4.5 lakh through a tender process about four months ago.

ELCOT also bought a set of conversion tools to migrate from existing documents in any format to the TAM/TAB storage format. This is also available under Linux and Windows environment for free download.

The interfacing will help transportability of documents from one system of encoding to another. In government offices, the downloaded fonts can be used on Tamil 99 keyboards, Remington layout keyboards and desktop keyboards.

"This will allow interoperability or exchange of documents freely between Linux and Windows systems and enable all applications to be free on Linux," Director of LSPL Thulakkanan said.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாறியோ மாகாண சபைக்கான தேர்தல் எதிர்பார்த்ததிலும் பார்க்கச் சூடு பிடித்துள்ளது. அத்துடன் சூட்டைக் கிளப்பியுள்ளது என்று சொன்னாலும் பொருத்தமே.

என் டி. பி தலைவர் ஹொவார்ட் ஹாம்ப்டன், லிபரல் தலைவர் டால்ரன் மக்கன்ரி, கன்சரவேடிவ் தலைவர் ஜோன் ரொறி ஆகியோர் மாகாணம் முழுவதும் சுற்றிச் சுழன்று சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டுள்ளனர்.

லிபரல் தலைவரை நோக்கியே கணைகள் கூடுதலாகப் பாய்கின்றன. கடந்த தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை மீறியவர் என்ற எதிரணிகளின் குற்றச்சாட்டை தட்டிக் கழிக்க முடியாத நிலைக்கு டால்ரன் மக்கன்ரி இறுக்கப்பட்டுள்ளார்.

இதனால், இறுதியில் "ஓம், நான் தேர்தல் வாக்குறியை மீறியவன்தான். அதனை மன்னித்து மறந்து விடுங்கள்" என்று வேண்டி நிற்கும் மக்கன்ரிக்கு வாக்காளர்கள் மீண்டும் சந்தர்ப்பம் வழங்குவார்களா, அல்லது நிராகரிப்பார்களா என்பதை 10ம் திகதி வரை எவராலும் உறுதியாகக் கூற முடியாது.

அதேசமயம், மக்கன்ரியின் லிபரக்குக் கடந்த தேர்தல் போல அறுதிப் பெரும்பான்மை இந்த முறை கிடைக்காது என்றும், அநேகமாக லிபரல் சிறுபான்மை அரசே அமையக்கூடும் என்றும் பல கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அப்படியான சந்தர்ப்பத்தில், என் டி. பி வெளியிலிருந்து ஆதரிக்கும் வாய்ப்பும் அதிகமுண்டு. அவ்வேளையில் என் டி. பியின் மக்கள் தேவைக் கோரிக்கைகளை மாகாண அரசு தட்டிக் கழிக்காது நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற.படும்.

இதனை மனதில் இருத்தியே ஹாம்டன் தமக்கு ஆகக்குறைந்தது 25 ஆசனங்களை இலக்கு வைத்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறு அவர் இலக்கு வைத்துள்ள ஆசனங்களில் (winning riding) ஒன்று ஸ்காபரோ - கில்ட்வூட் தொகுதி.

இங்கு என். டி. பியின் வேட்பாளராகக் களமிறங்கியுள்ளவர் எல்லோரும் நன்கறிந்த நீதன் சண்முகராஜா. இவரைத் தேடிப் பிடித்து நாடி வந்து அபேட்சகராகக் கட்சி நியமனம் செய்துள்ளது. இவர் சமூகப்பணி, பொதுப்பணி, கல்விப் பணி ஆகியவைகளில் குறைந்த வயதிலேயே நிரம்பிய அனுபவம் பெற்றவர். அரசியலுக்கும் புதியவரல்லர். சில வருடுங்கள் ஆசிரியராகப் பணியாற்றியவர். தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சரளமாக உரையாற்றும் திறமை மிக்கவர்.

நீதன் தற்போது மார்க்கம் கல்விச் சபையின் உறுப்பினராக (school trustee) உள்ளார். கடந்தாண்டு நடைபெற்ற தேர்தலில் அமோக வாக்குகளால் வெற்றியீட்டதன் ஊடாக. கனடாவில் கல்விச் சபை உறுப்பினராகத் தெரிவான முதலாவது தமிழர் என்னும் பெருமை இவருக்குண்டு.

## கனடியத் தமிழர் வாழ்வு

# தமிழர் போட்டியிடும் தொகுதிகளில் தமிழரகள் தமிழருக்கு வாக்களிப்பது தவறா? நிச்சயமாக இல்லை!

ஸ்காபரோ கில்ட்வூட் தொகுதியில் பிரதான மூன்று கட்சிகளின் அபேட்சகர்களாகவும் போட்டியிடுபவர்கள் புதியவர்கள். இவர்களில் எவரும் முன்னர் மாகாணசபை உறுப்பினர்களாக இருந்திருக்கவில்லை. இத்தொகுதியின் உறுப்பினராகவிருந்த லிபரல் கட்சியைச் சேர்ந்த ஆன் சாம்பஸ் இம்முறை போட்டியிடவில்லை. ஆதலால், இங்கு தேர்தல் புதியவர்களின் மும்முனைப் போட்டியாக வீச்சுப் பெற்றுள்ளது.

நீதனுக்கான வெற்றி வாய்ப்பு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. பதினையாயிரம் வாக்குகளை நீதன் பெறுவாரானால் வெற்றி நிச்சயம். தமிழர்களும் மற்றும் சிறுபான்மை இனங்களும் ஒன்றிணைந்து வாக்களிப்பின் இது இலகுவானது.

ஸ்காபரோ மத்திய தொகுதியில், கன்சர்வேடிவ் கட்சியின் அபேட்சகராகத் திரு. சாமி அப்பாத்துரை போட்டியிடுகின்றார். பல வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், கனடியத் தமிழர்கள் நன்கறிந்த சமூகப் பணியாளர். மைக் ஹரிஸ் ஆட்சி புரிந்த காலத்திலிருந்து கன்சர்வேடிவ் கட்சியில் உறுப்பினராக இருந்து வரும் சாமி அப்பாத்துரைக்குத் தமிழர்கள் ஒன்றிணைந்து வாக்களித்தால் வெற்றி வாய்ப்பு நிறைய உண்டு என்று முன்னர் இரு தடவை குறிப்பிட்டுள்ளோம்.

மிசிசாகா கிழக்கு - குக்ஸ்வில் தொகுதியில் சதீஸ் பாலசுந்தரமும், ஏஜக்ஸ் - பிக்கரிங் தொகுதியில் பாலா தநராஜசூரியரும் என் டி. பி. அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் தமிழர்களுக்குத் தமிழர்கள் தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டுமென்று கடந்த இதழில் நாம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதனையே இன்றும் வலியுறுத்துகின்றோம்.

ஒன்றாறியோ மாகாணத்தில் 107 தொகுதிகள் உள்ளன. இவற்றுள் நான்கு தொகுதிகளில் மட்டுமே தமிழர்கள் போட்டியிடுகின்றனர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் அந்த நான்கு தொகுதிகளிலும் வாழும் தமிழர்கள் தங்கள் வாக்குகளை இவர்களுக்குப் போடுவது நல்லது. இதனால் இரண்டு நன்மைகள் உண்டு, 1. தமிழ் வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். 2. தமிழர்களின் அதீத அரசியல் ஈடுபாட்டினை இங்குள்ள அரசியல் கட்சிகளும், கனடிய மக்களும் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படும்.

தமிழர்கள் தமிழர்களுக்கு வாக்களிப்பது பிரச்சனையை ஏற்படுத்தாதா என்ற வாதத்தை எவராவது எழுப்பினால், அவர்கள் சிந்திக்கத் தெரியாதவர்கள். தமிழர்கள் போட்டியிடும் நான்கு தொகுதிகளிலும் அவர்களுக்கே தமிழர்கள் தங்கள் வாக்குகளை அளிப்பதில் என்ன தவறுண்டு? நிச்சயமாகத் தவறில்லை. அதிபர் கனகசபாபதி அவர்களும் இக்கோரிக்கையைத் தமது கட்டுரையில் (14ம் பக்கம் பார்க்க) சுட்டியுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழ்ப் பெற்றார் சிலர் தங்கள் பிள்ளைகள் கனடாவில் தமிழைக் கற்பதால் என்ன லாபம் என்று கேள்வி எழுப்பியிருந்தனர். "ஒரு பிள்ளை தனது தாய்மொழியைக் கற்பதற்கு லாப-நட்டம் பார்க்க இது என்ன பலசரக்கு வியாபாரமா?" என்று கவிஞர் கந்தவனம் சுடச்சுட பதிலடி கொடுத்தது ஞாபகமுள்ளது. அதனையே இங்கும் பதிலாகக் கொள்ளலாம்.

சீனர்களும், சீக்கியர்களும், ஐரோப்பியர்களும் (முக்கியமாக இத்தாலியர், கிரேக்கர்) தங்களது இன வேட்பாளர்களுக்குத் தங்கள் வாக்குகளை அளித்திருக்காவிட்டால் அந்த இனத்தவர்கள் மாகாண-மாநகர சபைகளுக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெரிவு செய்யப்பட்டிருக்க முடியாது என்ற அப்பட்டமான உண்மையைத் தமிழர்கள் நினைவிற் கொள்ள வேண்டும்!

தமிழர்கள் வெற்றி பெறக்கூடாது என்பதற்காகச் சில தமிழர்கள் புல்லுருவிகளாக மாறி, தமிழ் வேட்பாளர்களுக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதும், தமிழ் வாக்காளர்களின் வீடுகளுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென்று கோரிக்கை விடுத்து வருவதும் கவலைக்குரியது.

இவர்களின் சதி வலைக்குள் தமிழர்கள் சிக்கக்கூடாது என்பதே நாம் சொல்லக்கூடியது. மீண்டும் தமிழின் பெயரால் சொல்கின்றோம் - 'போடு புள்ளடி தமிழனுக்கு நேரே!'.

**உக்கிரன் பார்வை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் தொடர்

பகுதி
19

# காதில் விழுந்தவை

238. *சேர்பியாவின் சீர்திருத்தப் பிரதமர்* (2007-05-23). The reformist Premier of Serbia. **சீர்திருத்தவாதப் பிரதமர்**.

சீர்திருத்தம் = Reform
சீர்திருத்தவாளர் = Reformer
சீர்திருத்தவாதம் = Reformism
சீர்திருத்தவாதி = Reformist

239. *அணு பரவல்* (2007-05-24). Nuclear proliferation. **அணுவாயுதப் பெருக்கம்**. இதனை *அணு பரவல்* என்பது அறவே பொருந்தாது. உலகமே அணுவினால் ஆனது என்பதால், *அணு பரவல்* என்னும் பேச்சுக்கே இடமில்லை!
பெருக்கம் = proliferation = multiplication
**அணுவாயுதப் பெருக்கம்** = Nuclear proliferation

240. *ஈரானின் அணு வல்லமை* (2007-05-24). Nuclear capability of Iran. **ஈரானின் அணுவாயுத வல்லமை** (குறிப்பு: 239).

241. *மன்னார்- வவுனியா முன்னரங்கப் பகுதியில் இலங்கை அரச படையினரின் 7 ஆர்ட்டிலெறிப் பீரங்கிகள் தகர்க்கப்பட்டுள்ளன* (2007-06-04). Artillery ஒரு கூட்டுப் பெயர் (collective noun). அது **பீரங்கிகள்** அல்லது **பீரங்கித் தொகுதி** அல்லது **பீரங்கிப் படை** என்று பொருள்பட வல்லது. ஈழநாட்டுச் சொல்தொகுதிகளும், சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியமும் இதற்குச் சான்று பகர்கின்றன. ஆகவே, *ஆர்ட்டிலெறிப் பீரங்கிகள்* என்பது கூறியது கூறல்.
பீரங்கிகள் (பீரங்கித் தொகுதி) = artillery
பீரங்கிப் படை = The Artillery
பீரங்கித் தாக்குதல் = artillery attack
பீரங்கிக் குண்டு = artillery shell

242. *சல்மன் ருஷ்டி எழுதிய The Satanic Verses என்ற புதினம்* (2007-06-18). Novel என்பதை வழமைபோல் *நாவல்* என்று குறிப்பிடாது, *புதினம்* என்று குறிப்பிட்டதே இதிலுள்ள புதினம்! Novel என்பதன் ஒலிபெயர்ப்பே நாவல். தமிழில் எழுந்த முதல் நாவல்: *பிரதாப முதலியார் சரித்திரம்* (1876). அந்த நாவலை எழுதிய ச.வேதநாயகம் பிள்ளை (1879-1889) அதனை *உரைநடை நவீனம்* என்றும், *வசன காவியம்* என்றும் குறிப்பிட்டுள்ளார். பிற்பாடு இது *நவீனம்* என்றும் *புதுமை* என்றும்..... கொள்ளப்பட்டது. நாளடைவில் **நாவல்** வேரூன்றிவிட்டது. *புதினம்* (news), *புதுமை* (bivekty), *நாவல்* (novel) என்னும் பெயர்ச் சொற்கள் உணர்த்தும் பொருள் நுணுக்கமாய் வேறுபடுவது கவனிக்கத்தக்கது. Novel பெயரடையாய் அமையும் பொழுது *புதுமையான* என்று பொருள்படும். *புதுமையான எண்ணம்* (novel idea).

243. *தமிழ் நாட்டில் கன மழை* (2007--6-24). Heavy rain இங்கு *கன மழை* ஆகியுள்ளது! **கடும் மழை, பலத்த மழை..**

244. *அவர் மாலைதீவு அரசின் விருந்தாளியாகப் பாவிக்கப்படுகிறார்* (2007-07-02). He is being treated as a guest... *விருந்தாளியாகப் பாவிக்கப்படுகிறார்* என்பது பொருந்தாது. **விருந்தாளியாக ஓம்பப்படுகிறார்** அல்லது **பராமரிக்கப்படுகிறார்** அல்லது **நடத்தப்படுகிறார்.**

245. *இலண்டன், கிளாஸ்கோ நகரங்களில் நடைபெற்ற தோல்வியடைந்த தாக்குதல்கள்* (2007--7-02). The abortive attacks in London and Glasgow. *நடைபெற்ற தோல்வியடைந்த தாக்குதல்கள்* என்பதில் மொழி அமைதி கெடுகிறது. **இலண்டன், கிளாஸ்கோ நகரங்களில் தோல்வியடைந்த தாக்குதல்கள்** அல்லது **இலண்டனிலும் கிளாஸ்கோவிலும் தோல்வியில் முடிவடைந்த தாக்குதல்கள்.**

246. *கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவது புத்திபூர்வமானதல்ல* (2007-07-02). Not advisable. **புத்திசாலித்தனமல்ல.**

247. *எங்கள் பந்துவீச்சாளர்கள் கடினமாக உழைக்கிறார்கள்* (2007-07-23). Our bowlers are working hard. *உழைப்பு* என்பது (1) சம்பாத்தியம் என்றும் (2) பாடுபடல் என்றும்... பொருள்படுவது உண்மையே. எனினும், இந்த ஆங்கிலக் கூற்றில் பாடுபடுவதே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. **எங்கள் பந்துவீச்சாளர்கள் கடுமையாகப் பாடுபடுகிறார்கள்.**

248. *பிளையர் தாம் கேட்பதற்காகவும், கற்றுக் கொள்வதற்காகவும், பிரதிபலிப்பதற்காகவும் மத்திய கிழக்கிற்கு வந்திருப்பதாகத் தெரிவித்தார்* (2007-07-023). இதன் தோற்றுவாய்: "this initial visit is a chance to listen, learn and reflect" (BBC, 2007-007-23). (1) இங்கு listen என்பது *கேட்பது* ஆகியுள்ளது. வாயாலும் கேள்வி கேட்கலாம் (வினவலாம்), சொல்வதைக் காதாலும் கேட்கலாம் (செவிமடுக்கலாம்). *செவிமடுக்கலாம்* என்பதே திட்டவட்டமானது. (2) Reflect என்பது *பிரதிபலி* என்று மட்டுமன்றி, *புலப்படுத்து, சிந்தி...* என்றெல்லாம் பொருள்படக் கூடியது. இங்கு அது *சிந்திப்பதையே* குறிக்கிறது. (3) *கற்றுக் கொள்வதற்காக* என்பதை *கற்பதற்காக* என்று குறுக்கலாம். அந்த வகையில் இதன் செவ்விய தமிழாக்கம்
**...செவிமடுப்பதற்காகவும், கற்பதற்காகவும், சிந்திப்பதற்காகவும்....**

249. *இலங்கை அரசாங்கத்தின் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சாடியுள்ளது* (2007-08-06). இதன் தோற்றுவாய்: "Human Rights Watch said there had been an increase in abuses since conflict resumed between the Tamil Tiger rebels and the government, effectively ending a 2002 ceasefire.... Human Rights Watch said there had been an increase in unlawful killings, enforced disappeaances and other abuses over the past 18 months" (BBC, 2007/08/06). சட்டவிரோதமான கொலைகள் (unlawful killings), காணாமல் போக்கடித்தல் (enforced disappearances), மற்றும் பிற உரிமை மீறல்கள் (and other abuses) போன்றவற்றையே *மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு* சாடியுள்ளது. அதாவது: **இலங்கை அரசாங்கத்தின் உரிமை-மீறல்கள் அதிகரித்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சாடியுள்ளது.**

250. *மனிதாபிமான அலுவல்களுக்கான ஐ.நா. துணைச் செயலாளர் நாயகத்தை (John Holmes) ஒரு தீவிரவாதி என்று இலங்கை அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே சாடியுள்ளார்* (2007-08-16). இதன் தோற்றுவாய்: "This man is also a terrorist. The Government pays no attention to what this man utters," - Minister Fernandopulle (Daily Mirror, Colombo, 2007/08/16). ஈழநாட்டு ஊடகங்கள் அனைத்தும் *பயங்கரவாதி, terrorist* இரண்டையும் நேரொத்த சொற்களாய் எடுத்தாண்டு வருகின்றன. தமிழ்நாட்டு ஊடகங்களும், அவற்றின் தாக்கத்துக்குட்பட்ட பிற தமிழ் ஊடகங்களும் terrorist என்பதை தீவிரவாதி என்று குறிப்பிட்டு வருகின்றன. ஈழநாட்டு ஊடகங்களின் சொல்லாட்சியே பொருத்தமானது என்பதைப் பின்வரும் சொற்கொத்து செவ்வனே உணர்த்துகிறது:

படுதீவிரவாதி = Jacobin
பயங்கரவாதி = Terrorist
பருமாற்றவாதி = Radical
தீவிரவாதி = Extremist


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வியாண்டும் சிறு சிறு அச்சங்களும்
# The New Academic Year 'BLUES'

புதுக் கல்வியாண்டு ஆரம்பமாகி விட்டது. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு விதமான பிரச்சனைகள் தோன்ற ஆரம்பித்து இருக்கும். எவ்வளவோ ஆண்டுகளாகக் கைக்குள் வைத்து வளர்த்த பிள்ளைகள் விடுதிகளில் தங்கிப் படிக்கப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று இருப்பார்கள். வீடே வெறிச்சோடிப் போய்விட்டது போன்ற பிரமை பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கும். பிள்ளையின் ஞாபகம் தான் தாய்மாருக்கு ஏற்பட்டபடி இருக்கும். நான்கு வயதைக்கூட முற்றாக அடையாத பச்சிளம் பாலகர்கள் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்து இருப்பார்கள். ஒரு நாள் மிகவும் சந்தோஷமாகவும், ஆரவாரமாகவும் செல்வார்கள், இன்னொரு நாள் அவர்களை வெளிக்கிடுத்துவது பகீரதப் பிரயத்தனமாக இருக்கும். இரண்டாம் நிலைப் பாடசாலையில் காலடி எடுத்து வைத்துள்ள பிள்ளைகள் திடீரெனப் பெற்றோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருப்பார்கள். இவற்றைவிட வதிவிடம் மாறியதால் தமது புதிய வீட்டிற்கு அண்மையில் உள்ள பாடசாலையில் சேர்ந்து புதிய சூழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பல பிள்ளைகள் கஷ்டப்படக்கூடும். மேலும் இந் நாட்டிற்குப் புதிதாக வருகை தந்த பிள்ளைகள் இங்குள்ள பாடசாலைகளில் திக்குத்தெரியாத காட்டில் விட்டது போல் தவித்தபடி இருப்பார்கள். எது பிரச்சனையாக இருந்தாலும் பிள்ளைகளுக்கு உறுதுணையாகப் பெற்றோர் இருக்க வேண்டிய நேரம் இதுவேயாகும்.

பல்கலைக் கழகங்களிற்குப் புதிதாகச் சென்றுள்ள பிள்ளைகளை நோக்கிய பெற்றோர் தான் இந்த மாற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் கஷ்டப்படுவார்கள். பிள்ளைகளுக்கு இது ஒரு பெரிய சாதனை. புதுவிதமான கல்விச் சூழல், பெரிய விரிவுரை மண்டபங்கள், பாரிய நூல் நிலையம், பேராசிரியர்களின் அறிமுகங்கள், தனி வாழ்க்கை - இவையெல்லாம் அவர்களுக்கு மனதில் புதிய உற்சாகத்தையும், உவகையையும் ஏற்படுத்தும். ஒவ்வொரு நாளும் தவறாது வீட்டிற்குத் தொலைபேசியில் அழைப்பார்கள். அது நாளாவட்டத்தில் கிழமைக்கு ஒரு முறை அழைப்பதாக மாறி பின்பு பணம் தேவைப்படும் நேரத்தில் தான் வீட்டு நினைவே அவர்களுக்கு வரும். இவையெல்லாம் அவர்கள் தங்கள் புதிய வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள் என்பதன் அடையாளங்கள். அவர்களுக்குக் கிடைத்த புதிய வாழ்க்கையையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கப் பெற்றோர் இடையூறாக அமையக் கூடாது. சில சமயங்களில் சில மாணவர்கள் இப் புதிய வாழ்க்கைக்கு ஈடுகொடுக்க முடியாமல் போகலாம். தாங்கள் தெரிவு செய்த பாட நெறிகள் சரியில்லையென்பது போல் மனதில் தோன்றலாம். அத்துடன் விடுதி வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படலாம். இவர்கள் வீட்டிலிருந்து பல்கலைக்கழகம் செல்ல விரும்பலாம், பல்கலைக் கழகத்தால் விலகி வேறு புதிய நெறிகளைப் பின்பற்ற விரும்பலாம் - இவற்றையெல்லாம் எப்படி பெற்றோரிடம் தெரிவிப்பது என பயப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆதரவாக இருத்தல் வேண்டும். அவர்களின் முறைப்பாடுகளுக்கு செவிசாய்த்தல் வேண்டும். சில பிரச்சனைகளை பெற்றோருக்குச் சொல்லப் பயந்து பிள்ளைகள் அவற்றைக் கையாள முடியாமல் மனநோயாளிகளாகக் கூட மாறலாம். பிள்ளைகளின் பிரச்சனைகளைக் கேட்டு அவர்களே சரியான முடிவுகளை எடுக்க உதவுதல் வேண்டும். பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கும் பொழுது பெற்றோரின் கடமை பெற்றோராக இருப்பதே. வயது ஏற, ஏற பெற்றோர் ஒரு



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

மேற்பார்வையாளராகவும், வழிகாட்டியாகவும் அமைய வேண்டும் (mentor, and Guide).

இந் நாட்டில் மூன்று வயது ஒன்பது மாதம் பூர்த்தியாகிய குழந்தைகளைப் பாலர் வகுப்பில் அனுமதிப்பார்கள். எமது கலாசாரத்தைப் பொறுத்தமட்டில் இக் குழந்தைகள் பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகள். பல வீடுகளில் இப் பிள்ளைகளுக்கு உணவைக் கூட தாய்மார் ஊட்டிவிட வேண்டியுள்ளது. ஆனால் இங்குள்ள பாடசாலைகளில் இப்பிள்ளைகள் தமது சுயதேவைகளைத் தாமே பூர்த்தி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றனர். கல்வி நெறிகளிலும் (Academic skills) பார்க்க சமூக நெறிகளுக்கு (Social skills) இவ் வகுப்புகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆசிரியரின் கட்டளைகளை விளங்கி நிறைவேற்ற வேண்டும். ஏனைய பிள்ளைகளோடு சண்டை பிடிக்காமல் குழுவாகச் செயல்பட வேண்டும் (Team work), ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டும் (Creative). ஏற்கனவே குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கு (Day Care) சென்ற பிள்ளைகளாக இருந்தால் பாலர் வகுப்பில் அனுசரித்துப் போவதற்கு (Adjustment) கஷ்டப்பட மாட்டார்கள். தாய்மாரோடோ, பேரன், பேத்திமாரோடோ இற்றைவரை இருந்துவிட்டுப் பாடசாலை செல்லும் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லத் தயக்கம் காட்டுவார்கள். இதனைப் பெரிதுபடுத்தாமல், பிள்ளைகளுக்குத் தென்பூட்டி, அவர்களோடு நாமும் பள்ளிக்கூடம் வரை சென்று, ஆசிரியரோடும் கலந்துரையாட வேண்டும். காலையிலும், மாலையிலும் ஆசிரியரிடம் பிள்ளையைப் பற்றி விசாரித்தால் நாங்கள் பிள்ளையின் கல்வியில் அக்கறை கொண்டுள்ளோம் என்ற உணர்வை ஏற்படுத்தும். ஆசிரியர்களுக்கு பெற்றோர் தமக்கு ஒத்துழைப்பாக இருக்கிறார்கள் என்ற உணர்ச்சியை ஏற்படுத்துதல் அவசியம். கூடியவரை வீட்டிலும் பிள்ளைகளை சுயமாகச் செயல்பட ஊக்குவித்தல் வேண்டும். பிள்ளையிடமும் அவருடைய அன்றைய பொழுது எப்படி இருந்தது என வினாவுதல் அவசியம். அவர் தனது சிறு கைகளால் செய்த சித்திரங்கள், கைப்பணிப் பொருட்களை வீட்டில் மாட்டி வைத்து அவருக்குச் சந்தோஷம் வரும்படி செய்தல் வேண்டும். 3, 4 மாதங்களில் பிள்ளை பயம் தெளிந்து பாடசாலைக்கு விரும்பிச் செல்வார்.

இரண்டாம் நிலைப் பாடசாலைக்கு முதன்முறையாகச் செல்லும் மாணவர்கள் நாளாந்தம் புதுப்புது "கதைகளுடன்' வீட்டுக்கு வருவார்கள். விசேட சித்திகள் அடிப்படையிலேயே இரண்டாம் நிலைக் கல்வி அடைவுகள் கணக்கிடப்படுகின்றன. இது இவர்களுக்கு ஒரு புதிய கற்றல் அனுபவம். ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறு ஆசிரியர்களிடமும், வெவ்வேறு வகுப்புகளுக்குச் செல்வதும், ஒன்றேகால் மணித்தியால வகுப்புகளில் இருப்பதும், மதிய சாப்பாட்டை அதற்குரிய மதிய போசன பாடநேரத்தில் - அது இரண்டாம் பாடமாகவும் இருக்கலாம், கடைசிப் பாடமாகக் கூட இருக்கலாம் உண்பதும் - இவையெல்லாம் இவர்களுக்கு புதிய அனுபவங்கள். இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வி பற்றி பெற்றோரும், பிள்ளைகளும் முன்கூட்டியே போதிய விளக்கத்தையும், அறிவையும் பெறுதல் வேண்டும். பாடங்களை விரும்பாதவிடத்தோ, ஆசிரியரோடு ஒத்துப் போக முடியாமல் இருந்தாலும் பிள்ளைகள் வகுப்புகளுக்குச் சமூகம் அளிக்காமல் இருக்கப் பார்ப்பார்கள். ஒவ்வாத சிநேகிதர்களின் சேர்க்கையால்

(மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

# வாழ்க எங்கள் tvi !

ஆறு வயதைத் தமிழ்த் தொலைக்காட்சி
அடைந்து வளர்ந்ததுவோ
பேறு பெற்றோம் என்றே தமிழர்
பெருமையில் திளைத்தனரோ!

ஆறுக்குள்ளே அறுபது வயதின்
அனுபவம் தெரிகிறது
மாறில் நடையும் படையும் மக்கள்
மதிப்பும் விரிகிறது!

முதன்முத லாகக் கனடா நாட்டில்
முழுத்தமிழ்த் தொலைக் காட்சி
மதிவலர் கண்டார் இருபத்துநான்கு
மணிநேரக் கலைக் காட்சி!

தமிழர் மரபுக் கலைகளைத் தாங்கும்
தமிழ்மொழி தனைவளர்க்கும்
தமிழர் ஒற்றுமை பேணிக் காக்கும்
தமிழீழத் தொலைக்காட்சி!

பொறுப்புடன் உலகச் செய்திகள் எல்லாம்
புடமிட்டுத் தொகுத்துத்தரும்
சிறப்புடன் கனடியத் தமிழர் விழாக்களின்
திறமும் சேர்த்துத்தரும்!

படலைக்குப் படலை செய்திக் கண்ணோட்டம்
பகடிக்கு Y.T. லிங்கம்
படிமுறைச் சிறுவர் படங்களோடு
படங்களும் பார்க்கத்தரும்!

கணினித் தமிழர் தொழில்நுட்பத்துக்
கலைக்குப் பெருஞ்சாட்சி
துணியுந் தூரப் பார்வைத்தமிழர்
சொந்தத் தொலைக்காட்சி!

பொழுதுகள் ஆறு போகங்கள் ஆறு
புறச்சமயம் ஆறு
அழகிய முருகன் வீடுகள் ஆறு
ஆதாரங்களும் ஆறு -

நாட்டதன் அமைதியும் அங்கமும் ஆறு
நாவதன் சுவை ஆறு
வாட்டமில் tvi அகவையும் ஆறு
வாழிய வாழியவே!

இனவிடு தலையின் உணர்வினை ஏற்றும்
எண்ணம் வாழியவே
கனடியத் தமிழர் கலைத்திறம் வளர்க்கும்
கருத்தும் வாழியவே!

## புதிய கல்வி...

ாரிய தீமைகள் ஏற்படும் காலமும் இதுதான். பெற்றோர் பிள்ளைகள் யாரோடு நட்புடன் பழகுகிறார்கள் என்பதில் கவனமாக இருத்தல் வேண்டும். வகுப்பில் நடக்கும் சிறு, சிறு பரீட்சைகள் கூட அவர்களின் விசேட சித்திகளைப் பாதிக்கும். ஆகவே வீட்டு வேலையையும் (Home work) பாடசாலை வருகையையும் (Attendance) கிரமமாகக் கைக்கொள்ள வேண்டும்.

இவற்றைவிட எல்லா வகுப்புகளிலும் மாணவர்கள் சில பொதுவான பிரச்சனைகளைச் சந்திப்பார்கள் - "எனது ஆங்கிலப் பாட ஆசிரியை மிகவும் இனத்துவேஷம் உடையவ. அவவுக்கு என்னில் விருப்பம் இல்லை" - "எனக்கு கணிதப் பாடம் ஒன்றுமே விளங்குதில்லை. மற்ற வகுப்பு கணித ஆசிரியை நன்றாகக் கற்பிக்கிறா. நானும் நேர சூசியை மாற்றி அங்கு போக வேண்டும்" - "எனது புவியியல் ஆசிரியர் அளவுக்கதிகமாக வீட்டு வேலை தருகிறார்", "எனது வகுப்பில் என்னோடு ஒருவரும் சினேகிதமாக இல்லை" - இப்படி எத்தனையோ முறைப்பாடுகளை எல்லா வகுப்புகளிலும் எங்கள் பிள்ளைகள் கூறத்தான் போகிறார்கள். இவற்றைக் கேட்டுவிட்டுப் பெற்றோர் முறைப்பாடுகளுடன் பாடசாலைக்கு ஓடாதீர்கள். சில பெற்றோர் பிள்ளைகளுக்கு அதிகளவில் பாதுகாப்பு அளிக்கத் தொடங்கி விடுவார்கள். இதற்கு மாறாகச் சில பெற்றோர் பிள்ளைகளின் முறைப்பாடுகளை காதில் கூடப் போட்டுக் கொள்ள மாட்டார்கள். இந்த இரண்டு முறைகளுமே பிழையானவை. உங்கள் பிள்ளைளுக்கு எந்தப் பிரச்சனை வருமிடத்தும் பெற்றோரின் உதவி உண்டு. அவர்கள் தனியாகக் கஷ்டப்படத் தேவையில்லை என்பதனை நாம் எமது செய்கைகள் மூலம் தெரியப்படுத்துதல் வேண்டும். பிள்ளைகளின் பிரச்சனைகளுக்கு ஆரம்ப காலத்தில் நாம் செவிமடுக்காவிட்டால் நாளடைவில் அவர்கள் எமக்கு ஒன்றுமே சொல்ல மாட்டார்கள். எமது நாட்டில் எமது பெற்றோருக்கு பெரிதாகவே பாடசாலைக் கல்வி இருக்காவிட்டாலும் பிள்ளைகளை அன்போடு அரவணைத்து நடத்தும் மனோதத்துவம் (Child psychology) தெரிந்து இருந்தது. இதனைவிட சகோதரர்கள், உறவினர்கள் என்போரின் ஆதரவும் (moral support) இருந்தது. இங்கு தனி அறையில் ஒவ்வொரு பிள்ளையும் என்ன செய்கிறார்கள் என்பதை அதே வீட்டில் இருக்கும் பெற்றோரால் கூட அறிய முடிவதில்லை. இந்நிலை மாற வேண்டும். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியை (Gap) போக்குதல் அவசியம். பெற்றோருக்கு ஒரு அறிவுரை - பாடசாலையில் ஆசிரியர்களுக்கு அடிக்கடி சென்று தொந்தரவு கொடுத்து அவர்கள் உங்களை ஒரு "தலையிடியாகக்" கருதாதபடி நடந்து கொள்ளுங்கள். பிள்ளைகளுக்குச் சரியான முறையில் உதவுதலும் ஒரு கலை. அதனை பெற்றோர் விருத்தி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் 200வது இதழ் வெளியீட்டுக்கு ஜேர்மனி 'வெற்றிமணி' அனுப்பிய வாழ்த்து!

தமிழர் தகவல் தனது 200வது இதழை இன்று வழமைபோல் குறித்த நேரத்தில் தன் குறிதப்பாது வெளியீடு செய்கின்றது.

முதலாவது இதழ் சொன்ன நேரத்தில்
வந்தால் அது வழமை!
200வது இதழ் சொன்ன நேரத்தில்
வந்தால் அது புதுமை!


ஒற்றைக்காலில் நிற்பதும்
நீண்டதூரம் துப்புவதும்
இரவு பகலாய் ஆடுவதும்
தொடர்ந்து நடப்பதும்
என்று கின்னஸ் சாதனைக்காய்
சாதனை படைக்கும்
மக்கள் மத்தியில்...

சாதனை என்று தெரியாமலே
மக்களுக்காய் சாதனை படைக்கும்
தமிழர் தகவலை

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும், தீமையைப்
போக்கவும்
என
வெற்றிமணி, சிவத்தமிழ் வாழ்த்துகின்றது.
அன்புடன்
**வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன்**
ஜேர்மனி

## 'டயற்' பானமும் நல்லதல்ல!

தினமும் ஒன்றிற்கு மேற்பட்ட டயட் குளிர்பானங்களை அருந்துபவர்கள், சாதாரண இனிப்புள்ள குளிர்பானங்களை அருந்துபவர்களுக்கு ஏற்படும் ஆபத்தான இருதய நோய்களுக்கு அதேயளவில் ஆட்படுகின்றனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த அறிக்கை, இருவகை பானங்களை அருந்துபவர்களிடையேயும் வித்தியாசம் இருக்கும் என எதிர்பார்த்த ஆராய்ச்சியாளர்களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இனிப்பற்ற பானங்களை அருந்துவதனால், வேறு இனிப்பான பண்டங்களில் ஆர்வத்தை அதிகரித்திருக்குமெனவும், மக்கள் சத்துள்ள சாப்பாடுகளில் குறைவாக கவனம் செலுத்தியிருப்பர் எனவும் கருதுகின்றனர்.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை**

தொடர் 11

# இரவு

தன் கருப்புப் போர்வையை விலக்கிக் கொண்டு தூக்கம் கலைகின்றது பூமி. அந்தக் கருப்புக்குள், ஈரம் பட்டதாய்ப் பலவும், எச்சில் பட்டதாய்ச் சிலவும் என, காலைக்காய்க் காத்திருக்கும் பூக்கள், தம்மை உலர்த்திக் கொள்ளக் கிழக்கை நோக்குகின்றன.

அதுவரையில் கருப்புநிறம் மட்டுமே பூசிக் கொண்டிருந்தன எல்லா நிறங்களும், சுய நிறம் ஒவ்வொன்றுக்கும் இருந்தாலும்.

எனினும் இரவு மெழுகிய பொது நிறத்திலிருந்து விடுபட முடியவில்லை எந்த நிறங்களாலும்.

ஆமாம்... இந்த நிறங்களுக்கு இரவு எதிரியா...? நண்பனா...?

நிறம் கண்டு வரும் வண்டுகள் உரசித் தரும் இன்பத்திற்கு, இரவு தருகின்ற இடைவெளியை வெறுத்தன சில பூக்கள். இதே இடைவெளியை விரும்பின வேறு பூக்கள். தன் கதிரவக் காதலனைக் கழுவேற்றிய இரவைக் காணப் பிடிக்காமல் தலை குனிந்தே இருந்தது சூரியகாந்தி.

அழுக்கான குளம் ஒன்று அழகாய்த்தான் இருந்தது அந்த இரவில். அவசர அவசரமாய் வந்த ஒருவன் அழுக்ககற்றும் ஆசையில் குளத்தில் மூழ்கி எழுந்தான். புதிதாய் ஏற்றிக் கொண்ட அழுக்குகளோடு. சாபம் நீங்கியதாய் குளம் இரவைப் போற்றிப் பாடியது. மூழ்கியவன் இரவைத் தூற்றிப் போனான்.

கும்மிருட்டு...

பாதை தவறிய நாத்திகன் ஒருவன் ஆலய வாசல் போய்ச் சேர்ந்தான். பேய்களைத் தேடிப் புறப்பட்ட பகுத்தறிவாளன் குரல்வளையை இறுக்கியது மலைப் பாம்புக் குட்டியொன்று. பதுங்கிச் சென்று தாயோடு படுத்துக் கொண்டது கட்டவிழ்ந்த பசுக்கன்று. விளக்கற்ற வீதி என்பதால் நிறச்சேலை அணிந்து நடந்தாள் விதவையொருத்தி.
அவள் பின்னாலேயே தாலி அணிந்து நடந்து அழகு பார்த்தாள் விலைமகள் ஒருத்தி.

விருப்பு வெறுப்பின்றி அத்தனை நிறத்திற்கும் மொத்தமாய்க் கருப்பு பூசி விடுகின்றது இரவு. இருப்பினும் கருப்பான சில விடிந்த பின்னும் கருப்பாகவே இருந்தன.
இத்தகைய கருப்பொன்றை இகழ்ந்தது பகல் நேர வெள்ளையொன்று. 'நாளில் பாதி நீயும் கருப்புதான். மறந்து விடாதே, கருப்பு இருப்பதாற்தான் வெள்ளை கவனிக்கப்படுகின்றது." கருப்பொன்று வெள்ளையாய்ப் பேசியது.

பகலின் பல நிறங்களுக்கும் அது பகல் வேட நிறமா...? இரவின் நிறந்தான் உள் நிறமோ.. உண்மை நிறமோ?

விருப்பு வெறுப்பு எதுவுமற்றது இரவு. தனக்குள் சிக்கும் அத்தனைக்கும் ஏற்றத் தாழ்வுகள் எதுவுமின்றி மொத்தமாய்க் கருப்பைப் பூசி விடுகின்றது.

கார்ல்மாக்ஸின் மனித சமத்துவத்திற்கு முன்னோடி இயற்கையின் இந்த இரவு சமத்துவந்தானோ...?

எது எவ்வாறாயினும், உலக உயிர்கள் எல்லாம், இருளைக் கரைக்கும் காலைப் பொழுதுக்காய்க் காத்திருக்கின்றன.

மனிதன் இரவை விரட்ட எத்தனையோ விளக்குகளைக் கண்டுபிடித்து விட்டான். எனினும் கிழக்கு சிவக்காதவரை இரவின் கருப்பை விலக்க எவராலும் முடிவதில்லை. ஒளி சிந்தும் விளக்குகள் எத்தனை இருப்பினும் பறவைகளைப் பாட வைக்க கதிரவனால் மட்டுமே முடிகின்றது.

இயற்கையின் அழகிய இடுக்குகளில் இருந்து மெல்ல எழுகின்றது பகல். கதிரவக் குழந்தையின் ஒளி மழலை. பகலின் அழுக்குகளை பனியில் கழுவிய புல்லின் இதழ்களும் பூக்களும் தலையை நீட்டுகின்றன திவலைகளைத் துவட்ட வரும் கதிரவக் கை தேடி.

தாமரையில் தேன் உண்டு மயங்கிய வண்டு, மூடிய இதழ்களுக்குள் சிறைப்பட்டிருக்கும். கதிரவன் கைபட்டு தாமரை இதழ் திறக்க, விடுபட்டுப் பறக்கும் வண்டு ஒரு சூரிய வணக்கம் செய்யும்.

இந்தக் காலைக் கலகலப்பைப் பார்த்தபடி கூரை மீதிருக்கும் ஒரு சேவல் தனக்குள் கூறிக் கொள்ளும். நான் கூறிச் சூரியனை எழுப்பவில்லை என்றால் பூமியில் இத்தனை கலகலப்பேது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்
எழுதுவது

# காதுக்குள் ஒரு குருவி

தன்னந்தனியாகவே உரத்துக் கதைத்தாலும் அதனால் அசடு வழியாதவர்கள் உலகமெங்கும் அதிகரிக்கின்றனர்.

விநாடி கூட விரயமாக்க விருப்பமில்லை என நினைப்பவர்கள் அகிலமெங்கும் பரந்து வியாபிக்கின்றனர்.

வார்த்தைகளை வீசி எறிந்து அடுத்தவரின் காதுகளை அவர்கள் பாரெங்கும் அதிரவைக்கின்றனர்.

காதுக்குள் கருவி காரணமாகி யுகங்களை அடைக்கின்றது.

குறிப்பாக இளைய சமுதாயத்திற்கு அதுவோ காதுக்குள்
ஒரு குருவியாகி இதயவானில் சீற்றத்துடன் சிறகு விரிக்கின்றது.

செல்லிடபேசியின் பாவனை அபரிமிதமாவது நாகரீகத்தின்
பலமான பலவீனம்!

அதன் கதிர்வீச்சு இதயநோய்களை உருவாக்கும் என்ற
கருத்து முன்பு வேகமாக இதயத்தைத் தாக்கியது.

செல்லிட பேசிகள் மிகக் குறைந்த அளவிலான நுண்கதிரை கணந்தோறும் வெளியேற்றுகின்றன.

அந்த நுண்கதிர்கள் காதுமடல்களின் உள்ளேயுள்ள எட்டாவது நரம்பை (Auditory Nerve) பாதிக்கப் பாதிக்க காது பின்னர் சிறிதுசிறிதாக கேட்காது என்றாகிவிடுகிறது.

தொடர்ச்சியாகத் தொடர்ந்து பாவிக்கும் மூளை இல்லாதவர்
களுக்கும் மூளையில் கட்டிகள் வரும்.

இவை இடையில் தெரியவர மேல்பாக்கெட்டில் வைத்திருந்தவர்கள் அதனை மாற்றி பவுச்சுக்குள் (pouch) நுழைத்து இடையில் செருகிச் சிரித்தார்கள்.

இப்பொழுது இடுப்பில் வைப்பதால் ஆண்மை வீரியமிழக்கும்,
கர்ப்பப்பை சிதைவுறும் என ஆராய்ந்து முடித்துள்ளார்கள்.

அடிவயிற்றுக்கும் இடுப்புக்கும் இடையே உள்ள பகுதி எஸ் - 30 எனப்படும். உணவு உறிஞ்சும் பகுதி யாகும் (Nourishment Area)

வலதுபுற இடுப்பில் செல்லிடபேசிகளை வைப்பதால் வெளியேறும் நுண்கதிர்கள் இப்பகுதியில் உற்பத்தியாகும் டெஸ்டோபீரோன் ஹார்மோன் எனும் சுரப்புக்களை தடை செய்ய அதனால்
ஆண்மை வீரியம் பாதிக்கும்

இடுப்பின் இடதுபுறம் உள் உறுப்புகள் குறைவென்பதால்
அங்கு செல்லிடபேசியை வைப்பது சிறிது பாதுகாப்பானதாம்

கணினி வைரஸ் போலவே செல்லிடபேசிவைரசுமுண்டு
என்பதும் பலருக்கு ஒரு புதுக்கதை.

ஒன்று இணையம் மூலம் பரவும். மற்றது (Blue Tooth)
நினைவு அட்டை மூலம் பரவுகின்றது.

## கவனிக்க வேண்டிய நோய் அறிகுறிகள் பத்து

1. காரணமற்று உடல் நிறையானது ஒரு மாதத்தில் உங்கள் எடையின் 5% இனால், அல்லது ஆறு தொடக்கம் 12 மாதங்களினுள் 10% இனால் குறையுமாயின், ஏதோ சரியில்லை என்று அர்த்தம்.
2. தொடர் காய்ச்சல்: தொடர்ந்து இலேசான காய்ச்சல் இருப்பின், வேறு ஏதோ வருத்தம் காரணமாக இருக்கும். உ+ம் சில வகை புற்றுநோய்கள், சயரோகம் போன்றவை.
3. சுவாசத் தடை: மூச்சு வாங்குதல், மூச்சிழுத்தல் அல்லது இழுப்பு போன்றவை எந்த கடுமையான உடற்பயிற்சியோ வேலைகளோ செய்யாத வேளைகளில் ஏற்படுமாயின் உடன் வைத்தியரை அணுகவும்.
4. விவரிக்க முடியாத வகையில் மலங்கழிப்பதில் மாற்றங்கள்: 2 நாட்களுக்கு மேல் கடுமையான வயிற்றுப் போக்கு காணப்படுமாயின் வைத்தியரைப் பார்ப்பது நலம். சாதாரண வயிற்றுப் போக்கு ஒரு கிழமைக்கு அதிகமாகவும் நீடிக்கும். மலங்கழிக்க முடியாத நிலை 2 கிழமைக்கு மேல் நீடித்தல். திடீர் திடீரென காரணம் தெரியாமல் மலங்கழிக்க வேண்டும் போலிருத்தலும், அவ்வாறே போதலும்.
5. மனநிலையில் மாற்றங்கள் ஏற்படல்: வித்தியாசமான நடத்தை, அல்லது நடவடிக்கைகள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவை.
6. கடுமையான தலைவலிகள்: ஒரு புதுவகையான தலையிடியை அவதானித்தல், குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவராயின் - இதை அதி கவன-மெடுக்கவும்.
7. சிறிது நேரம் பார்வை மறைதல், அசைவற்றிருத்தல், பேச்சிழத்தல்: இவை பக்கவாதம் வருவதற்கான அறிகுறிகள். சிகிச்சை அவசியம்.
8. வெளிச்சப் பொறிகள் தெரிதல்: திடீரென கண்ணில் வெளிச்சப் பொறி போன்ற தன்மை ஏற்படுவதானது கண்ணில் உட்பகுதியில் ஏற்படும் மாற்றத்தின் அறிகுறியாகும்.
9. சிறிதளவே உண்டாலும் வயிறு நிறைந்த உணர்வேற்படல்: இது பலவகையான புற்றுநோய்களில் ஏதாவது ஒன்றின் அறிகுறியாகலாம். - உ+ம்: சூலகம், வயிறு, கணையம் போன்றவற்றில் ஏற்படும் புற்றுநோய்கள். வாயுக் கோளாறுக்கும் அறிகுறியாகலாம்.
10. எரிவு, நோவுள்ள மூட்டுகள்: சூடாக, சிவப்பாக அல்லது வீங்கிக் காணப்படும் மூட்டுகள் பாரதூரமான தொற்று ஏற்பட்டுள்ளதற்கான அறிகுறியாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த மாதத்தின் சில நிகழ்வுகள்

மலேஷிய நாட்டுப் படைப்பாளி திரு. சுந்தரராஜன் அவர்களின் 'ஐந்து மூலங்கள்' (பஞ்ச பூதங்கள்) என்னும் நூலின் வெளியீட்டு விழா, இந்த மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஏழு மணிக்கு ஸ்காபரோ அத்லாந்தா மண்டபத்தில் (எல்ஸ்மெயர்/மிட்லான்ட்) நடைபெறவுள்ளது. அவரது நண்பர்களான சு. இராஜரத்தினம், பொன்னையர விவேகானந்தன் ஆகியோர் விழாவினை ஏற்பாடு செய்துள்ளனர்.

'நியுசிலாந்தில் தமிழன் பதித்த சுவடுகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா, இந்த மாதம் ஆறாம் திகதி பிற்பகல் ஆறரை மணி முதல் ஸ்காபரோ கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையில் ஆரம்பத்தில் மலையகப் பகுதியிலும் பின்னர் யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் விக்டோரியா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர் ஆ. தா. ஆறுமுகம் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார் மேலதிக விபரங்களுக்கு 416 490 8959.

செல்வி சிந்துஜா ஸ்ரீஸ்கந்தனின் பரதநாட்டிய அரங்கேற்றம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பிராம்டன் றோஸ் தியேட்டர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. கலை இலக்கிய நாடக விமர்சகரும் நல்லதொரு கட்டுரையாளருமான ப. ஸ்ரீஸ்கந்தனின் புதல்வி சிந்துஜா.

நடன ஆசிரியை நிறைஞ்சனா சந்துரு அவர்களின் கலை மன்ற பரதநாட்டிய ஆசிரிய தராதர பட்டமளிப்பு வைபவம் 8ம் திகதி திங்கட்கிழமை நோர்த் யோர்க் யோக்வூட் அரங்கில் முற்பகல் பத்து மணி முதல் நடைபெறவுள்ளது. மூன்றாவது ஆண்டாக இந்தப் பட்டமளிப்பு வைபவம் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது.

மதுரை ஆர். முரளிதரன், சித்ரா முரளிதரன் ஆகியோரின் மாணவியான வினிதா நவரத்தினம் வழங்கும் நிருத்திய சங்கமம் நாட்டிய நிகழ்ச்சி, 26ம் திகதி பிற்பகல் ஏழு மணி முதல் லி பொசலம் தியேட்டரில் (4588 Bathurst Street) நடைபெறவுள்ளது. விபரங்களுக்கு 416 418 6289, 416 358 1245.

செல்வி தர்ஷினி குகதாசனின் பரதநாட்டிய அரங்கேற்றம் இந்த மாதம் 27ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5:30 மணிக்கு ரொறன்ரோ ஆர்மீனியன் மண்டப அரங்கில் நடைபெறவுள்ளது.



குயின்ரஸ் துரைசிங்கம்

**கணினிப் பக்கம்** 16

## காக்க காக்க கணினி காக்க...

பல்வேறு பிரபலமான நிறுவனங்களும், மின்னஞ்சல் சேவையை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றன. இலவசம் என்றதும், என்ன சிக்கல்களில் பின்னர் மாட்டிக் கொள்ள நேருமோ என்ற அச்சம் தேவையில்லை. அவர்களது சேவையைப் பாவிக்கும் வாடிக்கையாளர்களில் கணிசமான விழுக்காட்டினர், அந்த இணையத் தளங்களிலுள்ள விளம்பரங்களைப் பார்வையிடவும் பயன்படுத்தவும் வாய்ப்பு இருக்கிறது என்பதால், பல பிரபல நிறுவனங்கள் இந்த இணையத்தளங்களை தங்கள் விளம்பர ஊடகங்களாகப் பாவிக்கின்றன. அவ்வாறு விளம்பரதாரரிடம் கட்டணம் அறவிடப்படுவதால், மின்னஞ்சல் சேவை நமக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

தற்போது கணினி உலகில் பரவலாக அதிகமான பாவனையாளர்களால் பயன்படுத்தப்படும் மின்னஞ்சல் முகவரிகளின் நிறுவனங்களைப் பார்ப்போம். அதிக காலமாக சேவையிலிருக்கும் இலவச மின்னஞ்சல் சேவைகளாக ஹொட்மெயில், யாகூ போன்றவை காணப்பட்டாலும், கூகிள் நிறுவனத்தால் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஜிமெயில் சேவை பாவனையாளர்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதிக பாவனையாளர்கள் பாவிக்கும் இலவச மின்னஞ்சல் சேவைக்கான முதல் ஐந்து தளங்களாக கருதப்படுபவை:

www.gmail.com
www.fastmail.ca
www.hotmail.com
wwwyahoo.ca அல்லது yahoo.com
www.mail.com

பாவனையாளர்களுக்கு மிக இலகுரக சேவையை, அதிகூடிய வசதிகளுடன் வழங்குகிறது ஜிமெயில். ஃபாஸ்ட்மெயில் சேவையும் பரவலாக அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. ஹொட்மெயில் மற்றும் யாகூ போன்றவை தொடர்ந்தும் கணிசமான வரவேற்பைப் பெற்று வருகின்றன. மெயில்.கொம் சேவையைப் பொறுத்தவரை, ஏனைய சேவைகளைப் போன்று இது பெருமளவு வரவேற்பைப் பெறாவிட்டாலும் கூட, மின்னஞ்சலைப் பெறும்போது, அந்த முகவரியின் பின்பகுதியையும் நாம் விரும்பியபடி பாரிய பட்டியலிலிருந்து தெரிவு செய்வதற்கு மெயில்.கொம் சேவை வாய்ப்பு வழங்குகிறது.

உதாரணமாக, பரமகுருநாதன் என்பவர் தனக்கென ஒரு புதிய முகவரி எடுத்துக் கொள்கிறார் என்று பார்த்தால், paramagurnathan@gmail.com என்று அவரது முகவரி அமையலாம். இதிலே, a என்ற ஆங்கில எழுத்தைச் சுற்றி ஒரு வட்டமிட்ட புதிய எழுத்து காணப்படுகிறதே, அதை அற் (at) என்று அழைக்கிறார்கள். இன்னுமொருவருக்கு இந்த முகவரியைக் கூறுவதாக இருந்தால், 'பரமகுருநாதன் அற் ஜிமெயில் டொட் கொம்' என்று இந்த முகவரியை நாம் கூற வேண்டும். மின்னஞ்சல் முகவரியில் பலருக்கும் எழுகின்ற பெரிய குழப்பங்கள் இரண்டு.

1) பெரிய எழுத்து - சிறிய எழுத்து குழப்பம் (Capital or Lower Case)
2) www என்ற எழுத்துக்களை எங்கே பாவிப்பது, எங்கே தவிர்ப்பது என்ற குழப்பம்

பெரிய எழுத்து அல்லது சிறிய எழுத்து பற்றியது. முகவரியை உருவாக்கும் போது, பரமகுருநாதன் தனது பெயரை, ParamaGuruNathan@Gmail.com என்று உருவாக்கியிருந்தால், முகவரி அதேபோன்றுதான் தோற்றமளிக்கும். ஆனால், இந்த முகவரியில் வரும் பெரிய எழுத்துக்கள் (Capital or Upper Case Letters) எல்லாம் மின்னஞ்சல் முகவரிக்கு பொதுவானவைதான். பெரிய ஜி (G), சிறிய யு (u), பெரிய என் (N) என்றெல்லாம் சொல்லி, முகவரி பெறுனரைக் குழப்ப வேண்டிய அவசியமில்லை. பெரிய சிறிய எழுத்துக்கள் என்பவை, முகவரி உருவாக்கியவர், தனது பெயரை மற்றவர் இலகுவாக வாசிக்கலாம் என்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளே தவிர, அவை மின்னஞ்சல் நிறுவனத்தைப் பொறுத்தவரை ஒரே தரத்தைக் கொண்டவையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## ராமர் பொறியியலாளரா? மு. க பொறி இயலாளரா?

சேது சமுத்திரத் திட்டம் இப்போது இராமர் ஒருவர் இருந்தரா? கண்ணகி என்று ஒருவர் வாழ்ந்தாரா? என்ற புதிய சர்ச்சையைத் தமிழ்நாட்டில் கிளப்பி விட்டுள்ளது. இதற்குக் காரணம் கருணாநிதி என்றவரின் வயோதிப வாய்.

பாரதிய ஜனதாவின் எதிர்ப்பினால் சேது சமுத்திரத் திட்டத்தை இந்திய மத்திய அரசு கொஞ்சம் பின்னடித்து வருகின்றது. இதனால் கருணாநிதிக்குக் கடும் கோபம்.

"ராமர் அணை என்பது கற்பனை; ராமர் என்ன பொறியியலாளரா பாலம் கட்ட?" என்று கருணாநிதி கேட்க, "வள்ளுவர் கோட்டம் அமைத்த கருணாநிதி எந்தப் பல்கலைக் கழகத்தில் 'பொறி இயல்' பட்டம் பெற்றவர்?" என்று பா.ஜ கேட்க...

"கண்ணகி உண்மையில் இருந்தாரா?' என்ற கேள்வியும் இப்போது வந்துள்ளது. போதாக்குறைக்கு பாரதிய ஜனதாவின் தமிழக அலுவலகங்களை தி. மு. க குண்டர்கள் அடித்து நொருக்கிச் சூறையாடியுள்ளனர்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கருணாநிதி" என்று தமிழகத் தினசரி ஒன்று கேலிச்சித்திரம் வரைந்துள்ளது.

## தாய்ப்பால் கொடுப்பதில் இப்படி ஒரு சாதனை

ஒரே நேரத்தில் ஏராளமான தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுத்து (தாய்ப்பால்) சாதனை படைத்த நிகழ்ச்சி கடந்த மாதம் வியட்நாமில் இடம்பெற்றது.

இங்குள்ள ஹனாய், கோசி மின், கான் தோ ஆகிய மூன்று நகரங்களில் ஒரே நேரத்தில் இது நடத்தப்பட்டது. ஆயிரத்துக்கும் அதிகமான தாய்மார் இதில் தங்கள் கைக்குழந்தைகளுடன் கலந்து பொது இடங்களில் கூட்டமாக அமர்ந்து பால் கொடுத்தது ஒரு முக்கிய நிகழ்வு என்று அந்நாட்டு அரசு கூறுகின்றது.
ஹனாய் நகரில் மட்டும் சுமார் ஐநூறு தாய்மார் பங்கு பற்றினார்களாம்.

குறிப்பு: இந்த நிகழ்வினைக் கமரா மூலமும் வீடியோ மூலமும் படமெடுக்க திரண்டவர்கள் அந்தத் தாய்மாரிலும் பார்க்க அதிகம். இவர்கள் அனைவரும் ஆண்கள் என்பது இதிலுள்ள விசேஷம்.

## கள்ளக் காசு அடிப்பதிலும் சிறிலங்கா முதலிடம்!

கள்ள 'நோட்' என்று சொல்லப்படும் தாள்க் காசு கள்ளமாக அடிப்பதிலும் சிறீலங்காவே உலகில் முதலிடத்தில் நிற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடிக்கப்படும் கள்ளக் காசுகள் ஆயிரம் ரூபா நோட்டுகளே. சராசரியாக நாளொன்றுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கள்ள 'நோட்டு'கள் பிடிபடுகின்றனவாம். கைதானவர்கள் நீதிமன்றின் முன்னால் நிறுத்தப்படினும் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர். கடந்த ஆகஸ்ட் மாதம் கொழும்பு மாவட்ட நீதிமன்ற மன்று, பதுளை உயர் நீதிமன்றுகளின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளப் பணத்தில் ஆயிரம் ரூபா கள்ள 'நோட்'டுகள் பதினாறு இருந்ததாக கொழும்பு ஊடகமொன்றின் செய்தி சொல்கின்றது.

இந்த பிசினஸையும் 'ராஜபக்ஷ சக சகோதரர் கம்பனி'யே (சிறீலங்கா அரசு) செய்வதாக எதிரணியினர் கூறுகின்றனர்.

## 94 வயது மூ..மூ..மூதாட்டி மருத்துவப் பட்டம் பெற்றார்

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பிலிஸ் ரேணருக்கு (Phyllis Turner) வயது 94. ஏழு பிள்ளைகள், 26 பேரப் பிள்ளைகள், 53 வரையான பூட்டப் பிள்ளைகள். பீட்டப் பிள்ளைகளும் உண்டு.

இவரது தந்தை தாயை விட்டுப் பிரிந்து போனதால் 12 வயதுக்கு மேல் பள்ளி செல்லவில்லை. தாயாருக்கு வீட்டு வேலை செய்வதற்கு உதவியாக இருந்தார். ஆனால் படிக்கும் ஆசை இவரை விட்டு விலகவில்லை

எழுபது ஆண்டுகளின் பின்னர், 84வது வயதில் அங்குள்ள Adelaine பல்கலைக் கழகத்தில் சேர்ந்து மருத்துவ துறையில் கல்வி கற்று 94 வயதில் மருத்துவராகப் பட்டம் பெற்று வெளியேறியுள்ளார்.

தாம் இன்னமும் இளமையாக இருப்பதாகவே நினைப்பதாகக் கூறும் இந்தப் பாட்டியம்மா, தொடர்ந்தும் படிக்கப் போவதாகக் கூறுகின்றார்.

அமெரிக்க, யப்பானிய கடதாசி டாக்டர் பட்டங்களை டாலர்கள் வழங்கிப் பெறுவோருக்கு, இந்த மூ..மூ..மூதாட்டி நல்ல சிம்மசொப்பனம்தான்!

## தேர்தல் காய்ச்சலால் மொட்டைப் பிரசுரங்கள்!

'வைச்சால் குடுமி; அடிச்சால் மொட்டை' என்றொரு வழக்கு தமிழில் உண்டு. இதனால்தானோ என்னவோ தமிழன் எங்கு போனாலும் இந்த 'மொட்டை'க் கலாசாரமும் அவனுடன் பிளேன் ஏறிச் செல்கின்றது.

மாகாண சபைத் தேர்தலையொட்டி சில 'மொட்டை'ப் பிரசுரங்கள் தமிழில் வந்ததைக் காண முடிந்தது. எழுத்துப் பிழை, சொற் பிழை, வசனப் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளலாம்; ஆனால் கருத்துப் பிழைளை ஆரிடம் முறையிடுவது?

கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தினரே இந்த 'மொட்டை'க் கடதாசிகளை அச்சடித்தவர்களாம். "லிபரல் கட்சி ஒரு தமிழனைக்கூட வேட்பாளராக முன்னிறுத்த விரும்பாததைச் சுட்டிக் காட்டினால், இவர்களுக்கு ஏன் கோபம் வரவேண்டும்?" என்று கேள்வி கேட்கின்றார் தமிழ் முதியோர் சங்கமொன்றின் நிர்வாகி.

'நலன் விரும்பிகள்' வெளியிட்ட பிரசுரமொன்றிற்கு, தலைப்புக்குக்கூட தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. 'தமிழர் தகவல்' கடந்த மாத இதழில் வெளியிட்ட ஒரு கட்டுரைக்கு இட்ட 'போடு புள்ளடி தமிழனுக்கு நேரே' என்ற தலைப்பை பிரதி பண்ணி ஒட்டி 'மொட்டை' வெளிவந்துள்ளது.

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதன் வெற்றி வாய்ப்பு மேலும் அதிகரிப்பு

# மாகாண என் டி. பி தலைவர் ஹாம்ப்டனும் மத்திய என். டி. பி தலைவர் லேட்டனும் நேரடியாகக் களத்தில் இறங்கிப் பிரசாரம்!





## தமிழ், ஆங்கில மொழிகளுடன் ஹிந்தியிலும் உருதிலும் உரையாற்றி இந்திய பாகிஸ்தானிய மக்களை வியக்க வைத்தார் நீதன்!

ஸ்காபரோ-கில்ட்வூட் தொகுதியில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் நீதன் சண்முகராஜாவுக்கான வெற்றி வாய்ப்பு தினசரி அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. என். டி. பி கட்சி தனது வெற்றிக்கான தொகுதிகளில் ஒன்றாக இதனைப் பிரகடனம் செய்துள்ளது. இதனையடுத்து கட்சியின் மாகாணத் தலைவர் ஹொவார்ட் ஹாம்ப்டனும், மத்திய தேசியத் தலைவர் ஜாக் லேட்டனும் நேரடியாகக் களத்தில் இறங்கி பிரசாரத்தை மேலும் முடுக்கி விட்டுள்ளனர். ஸ்காபரோ சங்கமம் மண்டபத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்த பிரசாரக் கூட்டத்தில் ஹாம்ப்டன் உரையாற்றினார். அக்டோபர் 10 தரப்போகும் வெற்றிச் செய்திக்கு இக்கூட்டம் கட்டியம் கூறுவதாகப் பலத்த கரவொலிக்கு மத்தியில் அவர் கூறினார். செப்டம்பர் 30ம் திகதி நீதனின் பிரசார அலுவலகத்துக்கு அருகிலுள்ள திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஜாக் லேட்டன் கலந்து உற்சாகமாக உரையாற்றுகையில், இந்தத் தொகுதிக்கு நீதன் ஒரு சொத்து என்று குறிப்பிட்டார். வழக்கம்போல தமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டும் உரையாற்றாமல் ஹிந்தியிலும் உருதுவிலும் வேட்பாளர் நீதன் உரையாற்றி அங்கு திரண்டு நின்ற இந்திய பாகிஸ்தானிய வங்காள மக்களை வியப்பிலாழ்த்தினார். கையில் எந்தக் கடதாசியோ தயாரித்த உரையோ இல்லாமல் மிக லாவகமாவும் சரளமாகவும் தெற்காசிய மொழிகளில் சுமார் நான்கு நிமிடங்கள் நீதன் உரையாற்றியதை ஜாக் லேட்டன் வைத்த கண் ஆடாமல் பார்த்து ஆச்சரியமுற்றார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# 10ம் திகதி சரித்திர முக்கியத்துவ தேர்தல்! நழுவ விடாதீர்கள்!

என்னை மிக ஆச்சரியத்தில் ஆழ்த்திய ஒரு செய்தி சென்ற மாதம் 10ம் திகதி Toronto Star பத்திரிகையில் வந்திருந்தது. இந்த நூற்றாண்டின் கனடா தேர்தல் முறையிலே ஏற்படுத்தற்கான முக்கிய மாற்றம் பற்றிய கருத்துக் கணிப்பு பற்றிய மக்கள் அபிப்பிராயத்தினை அறியும் பொருட்டு இப்பத்திரிகை 50 பேர்களை நகரின் மையப் பகுதியில் சந்தித்துள்ளது. ஆச்சரியம்! அவர்களில் ஒருவருக்கு மாத்திரமே கருத்துக் கணிப்பு பற்றிய விபரம் தெரிந்திருந்ததாம். மேலும் மூவருக்கு அதைப் பற்றி அறிவதற்கு ஆவல் இருந்ததாம். ஏனைய 46 பேர்களுக்கும் இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்ற நிலைதான். சென்ற மாதம் 9ம் திகதி விகிதாசார முறைத் தேர்தலுக்கான கருத்துக்கணிப்பு பற்றி விளக்கம் கூறுவதற்கான கூட்டம் ஒன்றினை திரினிற்றி ஸ்படைனாத் தொகுதியின் NDP பாராளுமன்ற உறுப்பினர் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார். அக் கூட்டத்திற்குச் சமூகமளித்தவர்கள் வெறும் 20 பேர்கள் மாத்திரமே. நம்மவர்களிலும் பலர் இந்தக் கருத்துக் கணிப்புப் பற்றிய அறிவு இல்லாமல் இருக்கலாம் அல்லது அக்கறை இல்லாமல் இருக்கலாம். இவை இரண்டுமே எமது சமூகத்தைப் பாதிக்கக் கூடியவை என்ற காரணம் கருதியே இக் கட்டுரை வரையப்படுகிறது.

ஒக்ரோபர் 10 மாகாணச் சட்டப் பேரவையினுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது என்றும் கொன்சர்வேற்றிவ் கட்சியின் சார்பில் திரு சாமி அப்பாத்துரையும், N.D.P சார்பில் நீதன் சண்முகராஜாவும் வேட்பாளர்களாக நிற்கின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. கட்சி பேதமின்றி அவர்கள் இருவருக்கும் தமிழ் மக்கள் எல்லோரும் ஆதரவு வழங்க வேண்டியது அவசியம். எமது குரல் சட்டப் பேரவையில் ஒலிக்க வேண்டும். அது எந்தக் கட்சி சார்பாயிருந்தாலும் கவலையில்லை. இம்முறை தமிழரை அனுப்புவோம். அடுத்த தேர்தலில் வேண்டுமென்றால் எமது கொள்கை சார்ந்தவர் ஒருவரை அனுப்புவோம்.

ஒக்ரோபர் 10 நடைபெறவுள்ள தேர்தல் இன்னொரு விதத்திலே முக்கியத்துவம் பெறவுள்ளது. அன்று வாக்காளர் ஒவ்வொருவருக்கும் இரண்டு வாக்குச் சீட்டுகள் தரப்படவுள்ளன. அதில் ஒன்று மாகாண சட்டப் பேரவையின் வேட்பாளரைத் தேர்வு செய்வதற்கான வாக்குச் சீட்டு. மற்றைய சீட்டு தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருவது தேவையா அல்லது இப்போதைய முறை தொடர்ந்து இருக்க வேண்டுமா என்ற உங்கள் அபிப்பிராயத்தை அறிவதற்கான வாக்குச் சீட்டு. ஒன்ராறியோவின் அரசு சென்ற ஆண்டு மாகாணம் எங்ஙனும் எழுந்தவாரியாக 104 குடிமக்களை தேர்வு செய்து அவர்களிடம் தேர்தல் முறையில் மாற்றம் செய்வது பற்றி மக்களுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவினை அரசினுக்குச் சிபார்சு செய்யுமாறு பணித்திருந்தது. தேர்தல் சீரமைப்பிற்கான ஒன்ராறியோவின் மக்கள் பேரவை (Ontario Citizen's Assembly) என இக்குழு பெயரிடப்பட்டது. இக்குழு பல இடங்களில் அமர்வுகளை நடத்தி மக்கள் அபிப்பிராயத்தை அறிந்த பின்னர் அரசிடம் தனது சிபார்சினைக் கையளித்துள்ளது. தேர்தல் முறையில் சீரமைப்பு வேண்டுமெனவும், இப்போ உள்ள முறையினுக்குப் பதிலாக கலப்பு அங்கத்துவ விகிதாசார வாக்களித்தல் முறை (Mixed Member Proportional Voting System - MMP) நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இக்குழு சிபார்சு செய்துள்ளது. விகிதாசார முறையின் தேர்தல்கள் பல நாடுகளில் நடைபெற்றாலும் அவை முறைமையில் நாட்டிற்கு நாடு வேறுபட்டுள்ளன. இத்தாலியிலோ, இஸ்ரேலிலோ நடைபெறுகின்ற முறையை நிராகரித்து ஜேர்மனி மற்றும் நியூசிலாந்து நாடுகளிலே கையாளப்படுகின்ற தேர்தல் முறையினையே நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்தக் குழு அரசுக்கு சிபார்சு செய்துள்ளது. அரசு இதனை வேண்டா வெறுப்பாக மக்கள் அபிப்பிராயம் தெரிவதற்காக இத் தேர்தலுடன் இணைத்து வாக்குப் பதிவுக்கு விட்டுள்ளது. 60% தொகுதிகளிலே 60% வாக்காளர்கள் இந்தச் சிபார்சுக்கு அங்கீகாரம் அளித்தால் தான் இச்சிபார்சு அமல்படுத்தப்படுமாம். நடக்கிற காரியமா? அதாவது குறைந்தது 64 தொகுதிகளிலாவது வாக்களித்தோரில் 60 வீதத்தினர் இதற்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டும். இது கல்லிலே நார் உரித்த மாதிரி என எண்ணுகிறேன். ஒன்ராறியோ மாநிலத்திலே 24% தினர் என்றுமே வாக்குச் சாவடிகளுக்குப் போனவர்கள் அல்ல. எனவே இவர்களால் பிரச்சனை இல்லை. 44% தினர் தான் பொதுவாகவே தேர்தல்களில் வாக்களிப்பவர்கள். இவர்கள் கருத்துக் கணிப்பிற்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டுமே?

சென்ற தேர்தலின் போது 103 தொகுதிகளுக்கான தேர்தல் நடந்துள்ளது. இவ்வருடத் தேர்தலில் தொகுதிகளின் எண்ணிக்கை 107 ஆக உயர்ந்துள்ளது. கலப்பு அங்கத்துவ விகிதாசார வாக்களித்தல் முறை மக்களால் அங்கீகரிக்கப்பட்டால் 2011ம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலின் போது அந்த முறையினது அடிப்படையினிலேயே தேர்தல் நடைபெறும். அதன்படிக்குச் சட்டப்பேரவை உறுப்பினர் எண்ணிக்கை 129 ஆக உயரும். ஆனால் தேர்தல் தொகுதிகளின் தொகை 90 ஆகக் குறைந்து விடும். தொகுதிகளின் தற்போதைய எல்லைகள் மீள அமைக்கப்பட்டு விடுவதால் 17 தொகுதிகள் இல்லாமல் போய்விடும். அத் தேர்தலின்போதும் ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்படும். அதில் ஒன்று அத்தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் தனது விருப்பத்துக்கு உகந்தவருக்காக அளிக்கப்படும் வாக்கு. மற்றைய வாக்கு, தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் தனது விருப்பத்துக்கு உகந்த கட்சியினைத் தேர்வு செய்வதற்கான வாக்கு.

வழமை போன்று 90 தேர்தல் தொகுதிகளிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் மக்கள் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்படுவார். ஏனைய 39 பிரதிநிதிகளையும் கட்சிகளிற்காக மக்கள் அளித்த வாக்குகளை எண்ணி பெற்ற தொகை வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறைப்படி தீர்மானிப்பார்கள். ஒவ்வொரு கட்சியும் தேர்தலுக்கு முன்னரேயே தேர்தல் ஆணையத்திடம் தனது கட்சியின் நியமன உறுப்பினர்களுக்கான ஒரு பட்டியலை விருப்ப வரிசை ஒழுங்கில் கொடுத்திருக்கும். ஒவ்வொரு கட்சிக்கும் விகிதாசாரப்படி ஒதுக்கப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையை இப்பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் தெரிவு செய்யும்.

மேலே உள்ள வரைவினிலே ஒன்ராறியோ மாகாணத்தின் சென்ற நான்கு தேர்தல்கள் பற்றிய விபரம் உள்ளது. ஒன்ராறியோவின் பிரதான மூன்று கட்சிகளும் மாறி மாறி ஆட்சி அமைத்துள்ளன. ஆனால் அவை எவையுமே பெரும்பான்மை மக்களின் ஆதரவினைப் பெற்று ஆட்சி அமைக்கவில்லை என்றாலும் சட்டப் பேரவையினிலே அவை ஒவ்வொன்றும் பெரும்பான்மை வகித்துள்ளன. உதாரணமாகச்
(26ம் பக்கம் வருக)

| ஆண்டு | ஆட்சி அமைத்த கட்சி | மக்கள் வாக்கு அளித்த வீதம் | கட்சி பெற்ற பிரதிநிதிகள் வீதம் |
|---|---|---|---|
| 1990 | என்டிபி | 37.6% | 56.9% |
| 1995 | கொன்சர்வேற்றிவ் | 45.0% | 63.1% |
| 1999 | கொன்சர்வேற்றிவ் | 45.1% | 57.3% |
| 2003 | லிபரல் | 46.6% | 69.9% |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200வது இதழ் மலர்வு வைபவம்

## கனடாவில் ஈழவேந்தன் எம். பி பங்கேற்ற முதல் பொதுநிகழ்வு



கடந்த மாதம் 3ம் திகதி இரவு கனடா வந்திறங்கிய இலங்கை தமிழர் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மா. க. ஈழவேந்தன், மறுநாள் நடைபெற்ற தமிழர் தகவல் 200வது இதழ் வெளியீட்டு வைபவத்தில் பங்கேற்றுச் சிறப்புரை நிகழ்த்தினார். தமிழர் தகவலின் வரலாற்று ஆவணப் பதிவுப் பணியை வியந்து கூறிய இவர், இதன் முதன்மை ஆசிரியரின் நான்கு தசாப்த கால பத்திரிகைத்துறை அனுபவம் இதற்கு உறுதுணையாக இருப்பதாகவும் கூறினார். தமிழ்த் தேசியத்துக்கு இப்பணி பெருமளவில் பங்காற்றுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வெளியீட்டுரையும் முதற் பிரதி கையளிப்பும்





பல பரிசுகளையும் சர்வதேச விருதுகளையும் பெற்ற உலகறிந்த மூத்த எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் இதழை வெளியிட்டு வைத்துச் சுருக்கமான உரை நிகழ்த்தினார். தகவலின் உதவி ஆசிரியரும் தயாரிப்பு முகாமையாளருமான திரு. சசி பத்மநாதனிடமிருந்து முதற் பிரதியைப் பெற்றுக் கொண்ட திரு. முத்துலிங்கம் அவர்கள், அதனை CMR, tvi நிறுவனங்களின் சமூகத் தொடர்பு இணைப்பாளர் திரு. ராகவனிடம் கையளித்தார்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு 645 டாலர்கள் கையளிப்பு

இவ்வைபவத்தின் நினைவாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு 645 டாலர்கள் வழங்கப்பட்டது. வைபவத்தில் பங்குபற்றியவர்களிடம் சிறுகச் சேகரிக்கப்பட்ட இந்நிதியை தகவல் தொண்டர்களின் இளைய உறுப்பினரான அனோஜினி குமாரதாசன், தமிழ்ப் படைப்பாளிகள் கழகத் தலைவரும் புனர்வாழ்வுக் கழகப் பிரமுகருமான நக்கீரன் வே. தங்கவேலு அவர்களிடம் கையளித்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வின் பதிவு

# 'சோதிடப் புரட்டு' நூல் வெளியீடு










உலகில் தமிழர் வாழுமிடமெங்கும் புகழ்பெற்ற கனடா தமிழ் படைப்பாளிகள் கழகத் தலைவர் நக்கீரன் வே. தங்கவேலு அவர்களின் 'சோதிடப் புரட்டு' நூலின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 8ம் திகதி ஸ்காபரோ கந்தசாமி கோவில் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மேற்படி கழகமும் முழக்கம் செய்தி இதழ் வெளியீட்டகமும் இணைந்து விழாவை ஏற்பாடு செய்திருந்தன. தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா. க. ஈழவேந்தன் சுமார் 45 நிமிடங்கள் பல தரவுகளையும் உள்ளடக்கிய ஆழமான உரையை நிகழ்த்தினார். திரு. ச. குகதாசன், அன்பரசி, பவானி தர்மகுலசிங்கம், முழக்கம் திரு. ஞானம் அந்தோனி உட்படப் பலர் இங்கு உரையாற்றினர். வாழ்த்துக் கவிதைகளும் வாசிக்கப்பெற்றன. பிரதம விருந்தினருக்கு இங்குள்ள தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மலர்மாலை சூட்டி, பட்டாடை போர்த்து சிறப்புச் செய்தனர். முழக்கம் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகளே நூலாக வெளிவந்துள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200வது இதழ் மலர்வு வைபவம்



பிரதம விருந்தினர்
நீதன் சண்முகராஜா



சிறப்பு விருந்தினர்
மா.க. ஈழவேந்தன் எம். பி



தமிழ்த்தாய் வாழ்த்து
அமிருதா-அருமிதா சசிகரன் சகோதரிகள்



கனடிய தேசிய கீதம்
அனோஜினி குமாரதாசன்



மீள்பார்வை
திரு எஸ். திருச்செல்வம்



வாழ்த்து
சி. ஜெயகாந்தன் குருக்கள்



ஆசி
ப. விஜயகுமாரக் குருக்கள்



வெளியீட்டுரை
அ. முத்துலின்கம்

## இருநூறு மாதப் பயணம் பற்றிய கருத்துப் பகிர்வு



திரு. நா. சிவலிங்கம்
தலைவர்
தமிழர் தகவல் நிலையம்



திரு. எஸ். சிற்றம்பலம்
தலைவர்
உலகத் தமிழர் இயக்கம்



நக்கீரன் வே. தங்கவேலு
தலைவர்
கனடிய தமிழ்ப்
படைப்பாளிகள் கழகம்




திரு. ஜூட்
அந்தோனிப்பிள்ளை
கனடிய வழக்கறிஞர்



Prof. அ. சந்திரகாந்தன்
தலைவர்
கனடியத் தமிழர் பேரவை




திரு. சுந்தரராஜா
மலேஷிய எழுத்தாளர்



திரு. சாமி அப்பாத்துரை
மாகாணத் தேர்தல்
வேட்பாளர்

**ஒளிப்படங்கள்**

கமல் கேகைலிங்கம்



திரு. கங்கா
தகவல் வாசகர்



விழாத் தொகுப்பு
திரு. குயின்ரஸ்
துரைசிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

# 200வது இதழ் மலர்வு வைபவம்

## தமிழர் தகவலின் பங்காளர்களு


டாக்டர் அ. சண்முகவடிவேல்


சிவஸ்ரீ சி. ஜெயகாந்தன் குருக்கள்


அதிபர் பொ. கனகசபாபதி


எஸ். ஜெகதீசன்


எஸ். பத்மநாதன்


பொன்னையா விவேகானந்தன்


என். கேதா


ராதா கிருஷ்ணசாமி


சிவா கணபதிப்பிள்ளை


குயின்ரஸ் துரைசிங்கம்


ராஜன் திருமுருகா


சார்ள்ஸ் தேவசகாயம்

தமிழர் தகவல்
இதழ்களின் ஆ
எழுத்தாளர்கள்
எழுத்தாளர்
தொடர்ந்து
வருபவர்கள், வ
வழங்கும் வ
வள்ளல்கள், ம
உதவிடும் தொ
நண்பர்க
வெளியீட்டுக்கு
தன்னார்வத் தெ
என்னும் த
குடும்பத்
பங்காளர்களா
நாற்பது பேர்
பணிக்கு ஏற்ற
பட்டயமும், சா
வழங்கி மதிப்
சிறப்புச் செய்ய
திரு. ஈழவேந்த
வீடு விற்பனை
ரமணன் ராமச்
கம்பியுடெக்
தெய்வேந்த
தொழிற்றுறை
கே. சபேசன்,
சாந்தகும
அறங்காவல
சிவலிங்கம், நக்
தங்கவேலு, வ
மனுவல் ஜே
எழுத்தாளர்
கலைஞர் தி
ஆகியே
பிரமுகர்களு
சிறப்புகளைச்
வருகை
முடியர்தவர்க
பட்டயங்க
சான்றிதழ்களுட
நேரடியாக அ
கையளிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200வது இதழ் மலர்வு வைபவம்

## ர்களுக்கு மதிப்பார்ந்த சிறப்பளிப்பு





கவிஞர் வி. கந்தவனம்



திரு. சிவா சின்னத்தம்பி



சிவஸ்ரீ ப. விஜயகுமார குருக்கள்




எஸ். காந்தி



வழக்கறிஞர் யசோ சின்னத்துரை



வழக்கறிஞர் யூட் அந்தோனிப்பிள்ளை



கே. சபேசன்




சசி பத்மநாதன்



றஞ்சி திருச்செல்வம்



ஆர். ஆர். ராஜ்குமார்



எஸ். ரி. சிங்கம்



கதிர் துரைசிங்கம்

மிழர் தகவல் மாதாந்த
தழ்களின் ஆரம்ப கால
எழுத்தாளர்கள், மூத்த
எழுத்தாளர்கள்,
தொடர்ந்து எழுதி
நுபவர்கள், வரையாது
வழங்கும் வர்த்தக
ர்ளல்கள், மனமுவந்து
தவிடும் தொழிற்றுறை
நண்பர்கள்,
வெளியீட்டுக்குழுவின்
ஊார்வத் தொண்டர்கள்
என்னும் தகவல்
குடும்பத்தின்
ங்காளர்களான சுமார்
ருற்பது பேர் அவரவர்
ரிக்கு ஏற்ற வகையில்
டயமும், சான்றிதழும்
ழங்கி மதிப்பளித்து
ப்புச் செய்யப்பட்டனர்.
ந. ஈழவேந்தன் எம்.பி,
டு விற்பனை முகவர்
ணன் ராமச்சந்திரன்,
கம்பியுடெக் தேசா
தெய்வேந்திரன்,
ாழிற்றுறை முன்னோடி
சபேசன், டாக்டர் வி.
சாந்தகுமார்,
அறங்காவலர் நா.
லிங்கம், நக்கீரன் வே.
கவேலு, வழக்கறிஞர்
னுவல் ஜேசுதாசன்,
ழுத்தாளர் க. நவம்,
லஞர் வி. திவ்யராஜன்
ஆகியோர்
பிரமுகர்களுக்கான
ப்புகளைச் செய்தனர்.
வருகைதர
டியர்தவர்களுக்கான
பட்டயங்களும்.
ன்றிதழ்களும் பின்னர்
ரடியாக அவர்களிடம்
கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

# 200வது இதழ் மலர்வு வைபவம்


சிறப்பு நடனம்
வினிதா நவரத்தினம்



## கனடிய அரசு வெளியிட்ட தமிழர் தகவல் தபாற் தலை

200 வது இதழ் வெளியீட்டினை முன்னிட்டு, கனடிய அரசு 52 சதம் பெறுமதியான தபாற் தலையை (முத்திரை) வெளியிட்டது. உருவம் எதுவும் பொறிக்காது எழுத்துக்களை மட்டும் (தமிழில் தமிழர் தகவல்) தாங்கிக் கனடாவில் வெளியான முதலாவது தபாற்தலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. திரு. ஈழவேந்தன் எம்.பி, தொழிற்றுறைப் பிரமுகர் திரு. கே. சபேசன் ஆகியோரிடம் தபாற் தலைகளை தகவலின் விநியாக முகாமையாளர் திரு. ஆர். ஆர். ராஜ்குமார் வழங்கி விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.


சிறப்பு நடனம்
யாழினி இராஜகுலசிங்கம்



## ஆண்டு மலர்களின் அட்டைப் பட்டயம்

தகவலின் பதினாறு ஆண்டு மலர்களின் அட்டைப் படங்களையும் தாங்கிய 3 அடி அகலமும் 4 அடி உயரமும் கொண்ட அழகான சிறப்புப் பட்டயத்தினை பிரபல வீடு விற்பன முகவர் திரு. செல்வா வெற்றிவேலு, தகவல் முகாமையாளர் திரு. எஸ். ரி. சிங்கத்திடம் வழங்கித் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.


'சுவையாடல்'
CMR கலைஞர்கள் எஸ். ரி. செந்தில்நாதன், பி. சுதாகர்

## வைபவத்துக்கு இனிப்பூட்டிய 'கேக்'

வைபவத்தின் இறுதி நிகழ்ச்சியாக யாழ் கேக் ஹவுஸ் சந்திரா தம்பிராஜா அவர்களால் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட மாமிசமற்ற கேக் வெட்டப்பட்டது. திரு. ஈழவேந்தன் எம். பி அவர்கள் இதனை வெட்டினார். மேடையில் நக்கீரன்
வே. தங்கவேலு, சட்டத்தரணி நாதன் சிறீதரன், வர்த்தக அதிபர் ராதா கிருஷ்ணசாமி ஆகியோருடன் தகவலின் வெளியீட்டுக் குழுவின் பிரமுகர்கள் சிலர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ரொறன்ரோ நகரில் திங்கட்கிழமைகளில் மூடப்பட்ட சகல சமூக நிலையங்களும் (community centres), இந்த மாதம் 15ம் திகதியிலிருந்து வழமை போல மீண்டும் திறக்கப்படவுள்ளன. ரொறன்ரோ நகர மேயர் டேவிட் மில்லர் தமது முன்னைய மாற்ற வேண்டிய அளவுக்கு நகரசபை உறுப்பினர்களும், நகர வரியிறுப்பாளர்களும் கடும் எதிர்ப்பினை அண்மைய நாட்களில் தெரிவித்து வந்தனர். கடந்த மாதம் 26ம் திகதி நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில், தமது முன்னைய முடிவினை வாபஸ் பெறும் அறிவிப்பை டேவிட் மில்லர் வெளிப்படுத்தினார்

உலகின் மிகச் சிறந்த பாதுகாப்பான நகரங்களில் ஒன்றாக பிராம்டன் நகரத்தை உலக சுகாதார ஸ்தாபனம் (World Health Organization) பிரகடனம் செய்துள்ளது. ரொறன்ரோ பெரும்பாகத்தில் முதன் முறையாக ஒரு நகரம் இவ்வாறு தெரிவானது இதுவே முதற்தடவையாகும். வடஅமெரிக்காவில் மொத்தம் பத்து நகரங்கள் இந்த அந்தஸ்தினைப் பெற்றுள்ளன. பிராம்டன் நகரப் பாதுகாப்பு மன்றம் இங்கு வாழும் மக்கள், வர்த்தகர்கள், சமூகக் குழுக்கள், நகரக் காவலர்கள் ஆகியோருடன் இணைந்து பாதுகாப்புக்கான பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இளம் பராயப் பெண்களை அதிகம் பாதிக்கும் Servical Camver (Human Papillona Virus) நோயிலிருந்து காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு இலவச தடுப்பு ஊசி மருந்தை ஏற்ற ஒன்றாறியோ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. முதற் கட்டமாக ஒன்றாறியோ மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் கல்வி கற்கும் எட்டாம் வகுப்பு மாணவிகளுக்கு இந்தத் தடுப்பு ஊசி ஏற்றப்படும். ஏறத்தாழ 64,000 இளம்பராய பெண்கள் இந்த இலையுதிர் காலத்தில் இதனைப் பெறுவர் என்று மாகாண அரசு அறிவித்துள்ளது.

கனடாவில் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் அதிகமானவர்கள் பெண்கள். இந்தத் தகவலை கனடிய புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. உயர் கல்வி கற்கும் ஆண் மாணவர்களில் 26 வீதமானோர் பல்கலைக் கழகம் செல்ல, பெண்கள் 39 வீதம் அனுமதி பெறுகின்றனர. ஆண் மாணவர்கள் தங்ளின் வீட்டுப்பாட வேலைகளை (home-works) ஓரம் தள்ளித் திரிவதே இதற்கு முக்கிய காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுளளது.

கனடிய நாடாளு,மன்றம் (மத்திய ஆட்சி) இந்த மாதம் மூன்றாம் வாரத்தில் கலைக்கப்படலாம் என்று தெரிகின்றது. தமது கட்சிக்காரர்களை அடுத்த தேர்தலுக்குத் தயாராகுமாறு பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் அறிவித்துள்ளார் இந்த மாதம் 16ம் திகதி ஹாப்பர் அரசின் இரண்டாவது சிம்மாசனப் பிரசங்க உரை பெறவுள்ளது. அதிலிருந்து சில தினங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமானால் இந்த வருட இறுதிக்குள்ளேயே பொதுத் தேர்தல் இடம்பெறக்கூடும்

கொழுத்த வருமானம் பெறும் கனடியர்களே கனடாவில் மேலும் மேலும் செல்வந்தர்களாகி வருகின்றனர். நடுத்தர வருமானக்காரர்களும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வசிப்பவர்களும் மேலும் ஏழைகளாகவும் கடன்காரர்களாகவும் மாறி வருகின்றனர் கனடியர்களின் வருமானத்தை அடிப்படையாக வைத்து 1992 - 2004ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்று இந்த விபரத்தைத் தந்துள்ளது. அதிக வருமானம் பெறும் 1.2 மில்லியன் கனடியர்களில் 75 வீதமானவர்கள் ஆண்கள் எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

HERITAGE Education Funds
RESP SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# பண்டிதர் சு.வே. நினைவு








உருவகக் கதைக் கலையின் பிதாமகரும், நாடகாசிரியரும் ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளில் ஒருவருமாகிய பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (சு.வே.) அவர்களின் நினைவுப் பகிர்வு ஒன்று கடந்த ஆகஸ்ட் 4ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5:30 மணிக்கு Agincourt Community Centre இல் நடைபெற்றது. கொழும்பில் தமது இறுதிக் காலத்தைக் கழித்து வந்த பண்டிதர் தமது 86வது வயதில் 22.06.2007 இல் இறைவனடி எய்திவிட்டார். இங்குள்ள அவரது மாணவர் திரு. த. சேகரும் மகன் முறையான திரு. ம. கிருபாகரனும் சேர்ந்து நினைவுக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். திரு. சேகர் தலைமை தாங்கினார். சு.வே.யின் சகோதரி முறையான திருமதி சரஸ்வதி வீரசிங்கம் குத்துவிளக்கை ஏற்றியும் படத்துக்கு மாலை அணிந்தும் தமையனாரை விழுந்து கும்பிட்டார். அவையோரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

முதற் பேச்சாளர் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்கள். 'சு.வே. யின் ஆசிரியம்' என்ற பொருளில் கேளாரும் கேட்பப் பொழிந்தார். அவர் பல்லுப் போனாலும் சொல்லுப் போகாதவர். அடுத்து சு.வே. யுடன் மானிப்பாயிற் படிப்பித்த திரு. சிற்றம்பலம் அவர்கள் உணர்வுபூர்வமான உரை ஒன்றை நிகழ்த்தினார். திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் சு.வே.யின் புனைகதையாக்கம் பற்றித் தகவல்கள் நிறைந்த நல்லதொரு நினைவுரையாற்றினார். திரு. குணநாதன் அவர்கள் சு.வே.யுடன் பாடநூற் சபையிற் பணியாற்றியவர். அனுபவங்களை அழகாகப் பகிர்ந்து கொண்டதோடு அரசாங்கத்தின் சதிகளையும் அம்பலப்படுத்தினார். அடுத்து நாடகக் கலைஞர் திரு. கே.எஸ். பாலச்சந்திரன் சு.வே.யை நல்லதொரு நாடக எழுத்தாளராக அவையோர் முன் அழுத்தமாகவே நிறுத்தினார். தொடர்ந்து 'தனலக்குமி புத்தகசாலையில் சு.வே.' என்ற பொருளில் நானும் பேசினேன்.

ஈற்றில் சு.வே.யின் 'கிடைக்காத பலன்' என்ற சிறுகதையை திருமதி இராஜ்மீரா இராசையாவும் குரும்பசிட்டி திரு. இராசரத்தினமும் நாடக பாணியில் வாசிக்க திரு. சேகர் நடித்துக் காட்டினார். அதனைப் பார்த்து சு.வே.யின் ஆன்மா புளகாங்கிதம் அடைந்திருக்க வேண்டும். திரு. சேகரும் ஒரு காரணத்துடன் தான் கதையைத் தெரிந்தெடுத்திருக்க வேண்டும்.

'கிடைக்காத பலன்தான்' சு.வே.யின் முதற் சிறுகதை. 1943ல் ஈழகேசரியில் வெளிவந்தது. அதன் களம் நாவற்குழி என்பது தொக்கு நிற்கும் வத்தகைப்பழம். சேகரின் நடிப்பு எங்களை நாவற்குழிக்கு மட்டும் அழைத்துச் செல்லவில்லை. சு.வே.யின் அப்பழுக்கற்ற கிராமிய உள்ளத்தையும் உரித்துக் காட்டியது; கண்களையும் கலங்க வைத்தது.

சு.வே.யின் குடும்பத்தார் சார்பில் திரு. ம. கிருபாகரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். தமிழை நன்கு அறிந்து, அதனைத் தனது அழகான எழுத்துக்களால் உளமார வளர்த்த ஓர் உன்னத படைப்பாளிக்கு அஞ்சலி செலுத்த வந்த தமிழ்ப் பற்றாளர்களுக்கு உண்மையில் நன்றி சொல்லத்தான் வேண்டும். அதனைச் சிற்றுண்டியும் வழிமொழிந்தது. சு.வே.யைப் பற்றிக் கனடாவில் முதன்முதலாக எழுதிய பெருமை எனக்குண்டு. ரோஜா இதழில் 'இலக்கிய உறவுகள்' என்ற தொடரில் அவரைப் பற்றிய கட்டுரை வெளிவந்தது. கட்டுரை ரோஜா ஆனந்த் அவர்களிடம் இன்றும் உள்ளது. சு.வே. வித்தியாசமான ஓர் எழுத்தாளர். 'சிந்தனைச் செம்மல்' என்று அவருக்குப் பட்டமும் சூட்டியிருக்கிறேன் - 1969ல். அவர் ஆக்கங்கள் வாழ்க! அவர் நினைவு வளர்க! - வி. கந்தவனம்

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public

REAL ESTATE LAW
RESIDENTIAL &
COMMERCIAL
BUSINESS LAW

Tel: 416 265 3456 Fax: 416 265-2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*
எஸ். பத்மநாதனின் தொடர் 14

# சிட்டுக்களே வாருங்கள்!

நீண்டகால விடுமுறையின் பின்பு மிகவும் குதூகலமாக மீண்டும் பாடசாலை வாழ்க்கைக்கு தயாராகின்றீர்கள். எந்த விளம்பரத்தினையும் பார்க்க நேரிட்டாலும் 'Back to School' என்ற வாசகத்தினை பெரிய அளவில் பொறித்து அதன் கீழே சில பொருட்களை விற்பனைக்காக பிரசுரித்திருப்பார்கள். சென்ற் போத்தல் விற்பவர் முதல் கார் விற்பனை செய்பவர் வரையில் இந்த விளம்பர உத்தியை பாவித்திருப்பார்கள். எல்லோருக்கும் கிடைத்துள்ள வியாபார மந்திரமே இந்த 'Back to school' தான்.

சிட்டுக்கள் உங்கள் படிப்பில் எதுவித அக்கறையும் செலுத்தாமல் உங்கள் பெற்றோர்களை எப்படியும் வருகை தரச் செய்து பணம் பறிக்கும் முயற்சியே இவர்களுடையது. இவர்களது விளம்பர முறைகளை பார்க்கும் போதெல்லாம் சிரிப்பு கூட வருகிறது. உங்கள் படிப்புக்கும் விற்பனை பொருளுக்கும் எதுவித சம்பந்தம் கூட இருப்பதில்லை. கார்களை கூட உங்களுக்காக விற்கிறார்களாம்!

சிட்டுக்களே மாமாவுக்கு உங்கள் படிப்பில் மட்டுமே அக்கறை. உங்கள் படிப்புக்குரிய சூழ்நிலையை எப்படி ஏற்படுத்துகின்றீர்கள் என்பதனை அறிய மிகவும் அவா ஏற்பட்டுள்ளது. புதிய பாடசாலை, புதிய வகுப்பு, புதிய நண்பர்கள் என்ற வகையில் உங்கள் சூழ்நிலை மாறியிருக்கிறது. படிப்பதிலும் ஒரு மாறுதலை செய்துதான் பாருங்களேன்!

முதலாவதாக உங்களுக்கு கூறும் புத்திமதி 'கட்டிலில் இருந்து படிக்காதீர்கள்' என்பதுதான். ஒழுங்கான மேசை கதிரையை யன்னலுக்கு அப்பால் சாதாரண சுவரோடு பொருந்த அமைத்து அதன் மேல் கைக்கு எட்டும் அளவுக்கு படிப்பு சாதனைங்களை வைத்து விடுங்கள். மேசை விளக்கு மிகவும் அவசியம். படுக்கையில் படுத்திருந்து படிப்பதால் அப்படியே உறங்கி விடுவீர்கள்.

படிப்புக்குரிய சூழ்நிலையில் தேவைப்படுவது 'அமைதி' சிலர் வானொலி கேட்டுக் கொண்டும் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டும் படிப்பார்கள். நீங்கள் சிட்டுக்கள். உங்களுக்கு மனதில் குதூகலம் இருக்கலாம். ஆனால் படிப்பிற்கு மிகவும் அமைதியான சூழல் அவசியம். இனிப்பு பண்டங்களையும், கொறிக்கும் பண்டங்களையும் கூட படிப்பு மேசையில் வைக்காதீர்கள். படிப்பவர் போல் பாசாங்கு பண்ணாமல் படியுங்கள்!

எந்த பாடத்தினையும் முன்கூட்டியே ஆயத்தம் செய்து விடுங்கள். நல்ல முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட குறிப்புக்களை எழுதிய வையுங்கள். எந்த பாடத்தில் கூட அக்கறை செலுத்த வேண்டும் என்பதனையும் அறிந்து கொள்ளுங்கள்.

சிட்டுக்களே! பலர் படிக்கிறார்கள். சிலரே கூடிய புள்ளி எடுக்கிறார்கள். இதன் இரகசியமே படிக்கின்ற முறைதான். சராசரி புள்ளி பெற படிக்காதீர்கள். உயர்ந்த புள்ளிகள் பெற படியுங்கள். எவர் முறையான படிப்பு சூழ்நிலையை உண்டாக்குகின்றாரோ அவரே உயர் புள்ளியை பெறுகிறார் என்பதே உண்மை. சமாதானங்களையும், சவால்களையும் விட்டு விட்டு இந்த அறிவுரையினை ஏற்கப் பாருங்கள்.

அன்பான சிட்டுக்களே, மாமாவின் அனுபவத்தில் மேல் கூறிய கருத்துக்களுடன் ரொறன்ரோ பல்கலைக்கழக கற்கும் ஆற்றல் ஆலோசகர் Dr. Nellie Perret இன் கருத்தும் ஒத்துப் போகின்றது. அவரது முடிவும் இதுதான். 'நேரத்தினை எடுங்கள், கவனமாயிருங்கள், சுய கட்டுப்பாட்டுடன் இருங்கள், எதனையும் தள்ளிப் போடாதீர்கள்"; இதுவே நல்ல படிப்புக்குரிய பழக்கங்களாகும். நீங்களும் இதனையே செய்யுங்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement

JOB OPPORTUNITIES
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**

JOB OPPORTUNITIES
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement

JOB OPPORTUNITIES
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**

JOB OPPORTUNITIES
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**

JOB OPPORTUNITIES
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**

JOB OPPORTUNITIES
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
We welcome:
- Social Assistance receipients
- EI - currently receiving / received receipients
- Maternity benefits received receipients

## Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

13

# வெள்ளிப் பணம் - டாலர்

இன்னும் இரண்டு மாதங்களில் 2007ம் ஆண்டு எம்மிடம் இருந்து விடைபெறப் போகின்றது. 2007ம் ஆண்டுக்குரிய வருமான வரிப் பத்திரத்தினை பூர்த்தி செய்யும் காலம் பொதுவாக 2008ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் 30ம் திகதி வரையான காலமாகும். இந்த வகையில் சிலர் பல்வேறு வகைப்பட்ட சூழலில் இரண்டு தொழில் பார்ப்பவர்கள் இருக்கின்றார்கள். சிலர் போதிய நேரம் காலம் கிடைத்தாலும் வருமான வரிப் பத்திரம் பூர்த்தி செய்யும் கடைசி நேரத்தில் தான் அதைப் பற்றிச் சிந்திப்பார்கள். ஆனால் வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்பது முதுமொழி. இதனை கருத்தில் கொண்டு செய்ய வேண்டிய முன் ஏற்பாடுகள் உள்ளன. அரசாங்கம் ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்தின் போதும் அறிவிக்கும் பல்வேறு வகைப்பட்ட வரிச்சலுகை, வரிவிலக்கு, புதிய வரிகள், அரசமானியங்கள் போன்ற விடயங்களை சராசரி மக்களும் அறிந்து வைத்திருப்பதும் வெள்ளிப் பணத்தினை மேலதிகமாக சேமிப்பதற்கு உதவியாக அமையும் என்ற கருதுகோளின் அடிப்படையில் உங்களுடன் சில தகவல்களை பகிர்ந்து கொள்ள முனைகின்றேன்.

பொதுவாக முன்னேற்பாடாகச் செய்ய வேண்டிய விடயங்களாக முதலாவதாக 2007 ஆண்டுப் பகுதிக்குள் நீங்கள் வசிக்கும் முகவரி மாறியிருக்கின்றீர்களா அப்படி மாறியிருந்தால் அதனை CRA என அழைக்கப்படும் Canada Revenue Agency க்கு தற்பொழுது இருக்கும் முகவரியை கொடுத்துள்ளீர்களா என்பதனை சரி செய்து கொள்ளுங்கள். அடுத்த முக்கிய விடயம் புதியவர்கள் வருகை. இளையவர்கள் திருமணம் செய்து கணவன் மனைவி புதிதாக கனடாவுக்கு வருகை தந்திருக்கலாம், அல்லது உங்கள் தாய் தந்தையர் வருகை தந்திருக்கலாம். இப்படியான சூழலில் இவற்றினை கருத்தில் கொண்டு இவை பற்றிய ஆலோசனைகளை வருமான வரிப் பத்திரம் பூர்த்தி செய்பவரிடம் பெறுவது புத்திசாலித்தனமானதாக அமையும்.

அடுத்ததாக வருமான நிலையில் மாற்றங்களை கொண்டவர்களும் தமது வருமான வரிப் பத்திரம் கடைசி நாள்வரை காத்திருக்காமல் தமது வருமானம் கூடுகின்ற நிலையில் வருமான வரியின் தாக்கத்தினை குறைப்பதற்கு RRSP மற்றும் பல்வேறு வகைப்பட்ட வழிமுறைகள் உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாக இருந்தாலும் இதனை கவனம் எடுத்து நேர காலத்துடன் கவனிப்பவர்கள் ஒரு சிலராக காணப்படுகின்றனர். 65 வயதை அடையப்போகும் முதியவர்களுக்கு பல்வேறுபட்ட வருமான வரிச்சலுகை மற்றும் அரசாங்க மானியச் சலுகைகள் உண்டு. அப்படியானவர்கள் உங்கள் குடும்பத்தில் இருந்தால் இதனையும் கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

விற்பனை பிரதிநிதிகளாகவும், ஒப்பந்த அடிப்படையில் நீங்கள் தொழில்புரிபவராகவும் நீங்கள் அதற்கான கொடுப்பனவுகளை பெறும் பொழுது உங்களுக்கு வருமானவரியை கழித்துக் கொண்டு தரப்படுவது இல்லையாயின் அவர்களுக்கு வருமான வரித்தாக்கம் அதிகமாக இருக்கும். அதேவேளை சில வகைப்பட்ட செலவினங்கள் உங்கள் வருமானத்தில் இருந்து குறைத்துக் காட்ட முடியும். இதுபற்றிய ஆலோசனைகளை ஏற்கனவே உங்கள் வருமானவரி ஆலோசகரிடம் பெற்றிருத்தல் அவசியம்.

எனவே காலநேரத்துடன் சில விடயங்களில் கவனம் செலுத்துவது நன்மை தரும். உதாரணமாக 2006 ஜுலை மாதத்தில் இருந்து போக்குவரத்துக் கட்டணங்களுக்கு செலுத்தும் பணத்துக்கு வரிச்சலுகை அரசு அறிவித்தது. ஆனால் பலர் அதற்கான பற்றுச்சீட்டினை கவனமாக வைத்திருக்காத காரணத்தால் அதற்கான வரிச் சலுகை பெற முடியாதவர்களாக காணப்பட்டார்கள். அதுபோல் இவ்வருடத்தில் இருந்து கனடிய மத்திய அரசு சிறுவர்களின் உடற்பயிற்சியினை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒரு குழந்தைக்கு அதாவது 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு பெற்றோர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு கழகத்திற்கு தமது பிள்ளைகளை குறைந்தது வாரத்திற்கு ஒரு முறை செல்லக்கூடிய ஒரு விளையாட்டோ அல்லது உடல் ஆரோக்கியத்துக்குரிய தற்பாதுகாப்பு கலை பயில்வதற்கான கட்டணங்களை செலுத்தியிருந்தால் ஒரு பிள்ளைக்கு $500 வெள்ளிப்பணம் வருமான வரி விலக்குரியதாக கணிக்கப்படும். இதனை ஆங்கிலத்தில் Non Refundable Tax Credit என அழைக்கப்படும்.

இது போல இவ்வருடம் குழந்தைகள் உள்ள பெற்றோர்களுக்கு ஒரு பிள்ளைக்கு $2000 வெள்ளிப்பணம் வருமானவரி விலக்கும் பெறும் தொகையாக கிடைக்க இருக்கிறது. இப்படியான தகவல் உங்கள் நிதி திட்டமிடல் நடவடிக்கைக்கு அவசியம் பயன்படும் எனக்கூறி அடுத்த இதழில் சந்திப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Jude**

**Anthonypillai LL.B. (Canada)**

Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
416 332 8547

**தொலைநகல்**
416 332 8379

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5


## பத்தாம் திகதி...

சென்ற 2003ம் ஆண்டுத் தேர்தலின் போது லிபரல் கட்சி வெறும் 46.6% மக்களின் ஆதரவினையே பெற்றிருந்தது. ஆனால் 103 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவை கலைக்கப்பட்ட பொழுது அக்கட்சிக்கு 69 பிரதிநிதிகள் இருந்தனர். மக்கள் தொகையினில் 53.4% இனர் அக்கட்சியினை அங்கீகரிக்காவிட்டாலும் கொன்சர்வேற்றிவ் கட்சியின் பிரதிநிதிகள் 24 பேர்களும் NDP பிரதிநிதிகள் 10 பேர்களுமாக வெறும் 34 பிரதிநிதிகளே 53.4% இனை பிரதிநிதித்துவம் செய்தனர். 2003 தேர்தல் நடந்து முடிந்ததும் ஏறக்குறைய 20 இலட்சம் வாக்காளர்கள் லிபரல் கட்சியினுக்கு வாக்களித்திருந்தனர். ஆனால் அக்கட்சி சார்பிலே வெற்றி பெற்ற உறுப்பினர் தொகை 72 ஆக இருந்தது. கொன்சர்வேற்றிவ் கட்சி அச்சமயத்திலே பெற்ற வாக்கு எண்ணிக்கை ஏறக்குறைய 15 இலட்சமாக இருந்தது. ஆனால் உறுப்பினர் தொகை 24 மாத்திரமே. N.D.P பெற்ற வாக்கு எண்ணிக்கை 6,60,000. இவர்களுக்கு அப்பொழுது கிடைத்த உறுப்பினர் எண்ணிக்கை வெறும் 7 மாத்திரமே. ஆனால் அத்தேர்தலில் பசுமைக் கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 125,000, ஆனால் அக் கட்சியின் உறுப்பினர் எவருமே தேர்ந்தெடுக்கப்படவில்லை. மொத்தத்தில் 20 இலட்சம் வாக்குகள் பெற்ற லிபரல் கட்சிக்கு சட்டசபையினில் 72 உறுப்பினர் 1 இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் வாக்குகள் பெற்ற பசுமைக் கட்சிக்கு ஒரு உறுப்பினர் கூடச் சட்டசபையில் இல்லை. இவ்விதமாக மக்களது ஏகோபித்த அங்கீகாரம் பெறாத கட்சிகளே ஆட்சி அமைத்து வந்துள்ளன. இது எந்த விதத்தில் நியாயம்? எனவே இப்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியம். அப்போ தான் மக்களது உண்மையான அங்கீகாரம் பெற்ற கட்சி ஆட்சிப் பொறுப்பினை ஏற்கும். ஆனால் இத்தேர்தல் முறை மாற்றத்தில் ஆளும் கட்சியான லிபரல் கட்சியும் பிரதான எதிர்கட்சியான கொன்சர்வேற்றிவ் கட்சியும் அக்கறை காட்ட மாட்டாது. தேர்தல் முடிவுகளால் அக்கட்சிகள் பாதிக்கப்பட இடமுண்டு. இதனால் அனுகூலம் NDPயினுக்கும், தேர்தலில் தொடரந்து பங்கு பற்றியும் இதுவரை சட்டப் பேரவையில் அங்கத்துவம் பெறாத பசுமைக் கட்சிக்கும் மாத்திரமே. கலப்பு அங்கத்துவ விகிதாசார பிரதிநிதித்துவ வாக்களித்தல் முறையினால் ஒரு கட்சி ஆட்சி அமைக்கும் வலிமை பெறாமல் கூட்டரசாட்சி நடைபெறும் வாய்ப்பும் அதிகம் உள்ளது.

இந்தத் தேர்தல் முறையில் குறைகள் உள்ளன எனச் சொல்லுவாரும் இல்லாமல் இல்லை.

1. ஒவ்வொரு கட்சியும் தருகின்ற நியமன அங்கத்துவர் பட்டியலில் மக்கள் அபிமானத்தை பெறாது ஏன் வெறுக்கத் தக்கவர்கள் இடம்பெற அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினராகும் வாய்ப்பு உண்டு. 2. இப்போது 107 ஆக உள்ள பேரவைத் தொகுதிகள் புதிய திட்டம் அங்கீகாரம் பெறுமாயின் 90 ஆகக் குறைக்கப்படும். இதனால் தொகுதிகளின் சராசரிப் பரிமாணம் அதிகரிக்கும். முக்கியமாக வடபகுதித் தொகுதிகளின் பரப்பளவு இப்போது உள்ளதே மிகப் பெரிது. தொகுதிப் பிரிவினை மீளச் செய்கையில் அவற்றின் பரப்பளவு மிக அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு. 3. இப்போது 107 சட்டப்பேரவை உறுப்பினரைக் கொண்ட சபை 129 ஆக உயரும் பொழுது அதற்கான செலவினங்களும் அதிகரிக்கவே செய்யும்.
4. பெரும்பான்மை பெற்று எந்தக் கட்சியும் ஆட்சியில் அமர முடியாது. எனவே சிறுகட்சிகளின் தயவிலே தான் ஆட்சி நடைபெறும். ஆளும் கட்சி மக்களுக்குச் சொல்லி வாக்குப் பெற்ற வேலைத் திட்டத்தை முற்றாகவே செயற்படுத்துவதற்கு தயவுக் கட்சி அதனை எதிர்த்தால் அதனைக் கைவிட வேண்டி வரும் அல்லது ஆட்சியை இழக்க வேண்டிவரும். ஆதலினால் தேர்தல் அடிக்கடி வரும் வாய்ப்பு உண்டு. 5. இந்தத் தேர்தல் முறையினால் கூடுதலான பெண்கள் பிரதிநிதித்துவம் பெறும் வாய்ப்பு உண்டு எனக் கூறப்படுகிறது. ஆனால் இஸ்ரேல் நாட்டில் விகிதாசார பிரதிநிதித்துவம் உள்ளது. ஆனால் 120 உறுப்பினருடைய பேரவையில் வெறும் 18 பெண்கள் மாத்திரமே உள்ளனர். சிறுபான்மைக்கும் இவ்விதமான ஏமாற்றம் ஏற்படலாம்.

குறைகள் இல்லாமல் இல்லை. ஆயினும் உலக நாடுகள் பலவற்றிலே இந்த வகையான தேர்தல் முறைமையே தான் கையாளப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை எல்லா நாடுகளிலும் பாராளுமன்றங்களிலே குறைந்தது 30% த்தினராவது பெண்கள் அங்கம் வகிக்க அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. இதனை விகிதாசார முறைத் தேர்தல் முறையினாலேயே பல நாடுகள் ஈடு செய்கின்றன. மேலும் சொல்லப்படுகின்ற முதலாவதும் ஐந்தாவதும் குறைகள் கட்சியின் தலைமையைப் பொறுத்தது. அது தருகின்ற நியமன அங்கத்தவர் பட்டியல் கொண்டுள்ள உறுப்பினர் தெரிவு கட்சியின் மேல் மட்டத்தின் செயற்பாடே. அங்கே நீதிமுறை இருக்கும் என எதிர்பார்க்கலாம். N.D.P. தலைவர் ஹோவார்ட் ஹாம்ரன் அவர்கள் தனது நியமன அங்கத்தவர் பட்டியலையும் மாகாணம் முழுவதுமுள்ள தன் கட்சி சார்ந்த உறுப்பினர்களின் வாக்கு எண்ணிக்கையை வைத்தே தெரிவு செய்யப் போவதாகக் கூறியுள்ளார்கள். இதுபற்றி மக்குவின்ரியும் ஜோன் ரோறியும் இன்னும் வாய் திறக்கவில்லை? அவர்களுக்குத் தெரியும் இந்தத் தேர்தல் முறை தங்களுக்குச் சிரமம் தரக்கூடியது என்று. ஆனால் இது மக்கள் அங்கீகாரம் பெறுவது அவ்வளவு சாத்தியம் அல்ல என்பதும் அவர்களுக்குத் தெரிந்ததே. 60% தொகுதிகளிலே 60% வாக்காளர் அங்கீகாரம் பெற்றால் தான் இந்தச் சீரமைப்பு அங்கீகரிக்கப்பட்டு 2011 ஆண்டுத் தேர்தல் இந்த முறையிலே நடைபெறும். இது சாத்தியமா?

இதனால் சிறந்த அரசு ஏற்பட நல்ல சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆகவே தவறாது ஒக்ரோபர் 10ம் திகதி தேர்தலில் பங்குபற்றுங்கள். தேர்தல் முறைமையில் மாற்றம் வேண்டும் என வாக்களியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்க காலம் தமிழின் பொற்காலம்



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 5

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பண்பட்ட செம்மொழிகளுக்கு எல்லாம் ஒரு பொற்காலம் இருந்திருக்கிறது என்ற உண்மை தெரிய வரும். எடுத்துக் காட்டாக ஆங்கில மொழிக்கு வில்லியம் சேக்சுபியர் (William Shakespeare (1564-1612)) வாழ்ந்த காலத்தை பொற்காலம் என அழைக்கப்படுகிறது. அவர் 37 நாடகங்களையும் 14 அடிகள் கொண்ட 154 கவிதைகளையும் (Sonnet) எழுதியிருக்கிறார்.

தமிழ்மொழியின் பொற்காலம் எது? சங்க காலமே தமிழ்மொழியின் பொற்காலம் என்பது தமிழ் அறிஞர்களது ஒத்த கருத்தாகும். தமிழ்மொழியின் பொற்காலம் மட்டுமல்ல தமிழரின் பொற்காலமும் சங்க காலந்தான்.

பிற்கால சோழர்காலமும் பொற்காலம் என அழைக்கப்பட்டாலும் இவர்கள் காலத்திலேயே, குறிப்பாக முதலாம் இராசராசன் (985 - 1014) அவன் மகன் முதலாம் இராசேந்திரன் (1012 - 1044) காலத்திலேயே வடக்கில் இருந்து பெருந்தொகையான ஆரிய வேதியர்கள் கொண்டு வரப்பட்டு தமிழகத்தின் வளமான நிலங்களில் குடி அமர்த்தப்பட்டார்கள். அவர்களது குடியிருப்பு அகரங்கள், அக்கிரகாரங்கள், சதுர்வேதி மங்கலங்கள் என அழைக்கப்பட்டன. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் வரி விதிப்பில் இருந்து (இறையிலி நிலம்) விலக்கப்பட்டது.

முதலாவது இராசராச சோழன் அவன் மகன் முதலாவது இராசேந்திரன் காலத்தில் புலிக்கொடி பறந்த சோழப் பேரரசின் கடற்படை வங்கக் கடலில் உலா வந்தன. சாவகம், புட்பம், கடாரம் வரை சோழர்களது மேலாண்மை இருந்தது. எல்லாம் இருந்தும் தீவிர பக்தர்களான சோழர்கள் வடமொழிக்கு வழங்கிய ஆதரவை தமிழ்மொழிக்கு வழங்கவில்லை. தமிழ் வழிபாட்டிற்கும் சடங்கிற்கும் தகாத மொழியெனத் தள்ளி வைக்கப்பட்டது. வேதப் பாடசாலைகளைக் கட்டி அவற்றின் இயக்கத்துக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தார்கள். தமிழ்மொழிக்கு ஒரு பள்ளியேனும் கட்டினார் இல்லை.

எண்ணாயிரத்திலுள்ள ஒரு கல்வெட்டு வேதப்பள்ளியில் வேதங்களைப் படிப்பிக்க 10 பேராசிரியர்கள் அமர்த்தப்பட்டதைக் கூறுகிறது. அங்கு மொத்தம் 14 பேராசிரியர்கள், 70 முதுநிலை மாணவர்கள், 270 இளநிலை மாணவர்கள் கல்வி கற்றார்கள். திருக்கூடல் கல்வெட்டு, கோயில் நிருவாகத்தின் கீழ் ஒரு கல்லூரி இருந்ததைக் கூறுகிறது.

திருவிடைமருதூர், திருவிடைக் கழி, அணியூர், எண்ணூர், முக்கூடல் போன்ற இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் வேதம், இலக்கணம், மருத்துவம் போன்றவை பயிற்றுவிக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் தமிழ் படிப்பிக்கப்பட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை. (தமிழக வரலாறும் பண்பாடும் - பக்கம் 216)

இருந்தும் நாயன்மார்களது தேவாரங்களையும், ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங்களையும் இசையுடன் பாட ஓதுவார்களை கோவில்களில் முதலாம் இராசராசன் அமர்த்தினான் என்பது உண்மையே. ஆனால் பிற்காலத்தில் இந்த வழக்கம் கைவிடப்பட்டது. இராசராசன் தில்லையம்பலத்தில் தில்லைவாழ் மூவாயிரம் அந்தணர்களால் ஒரு அறையில் பூட்டிவைக்கப்பட்டுச் செல் அரித்துப் போன தேவாரப் பதிகங்கள் அடங்கிய ஏட்டுக் குவியலைக் கண்டெடுத்துப் புதுப்பித்தான் எனச் சொல்லப்படுகிறது.

வேதியர்களின் குடியேற்றத்தினால் சாதி சமூகம் இறுக்கம் அடைய வழிகோலியது. வருணாசிரமதர்மம் வலியுறுத்தப்பட்டது. மக்களிடையே பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது. சாதிக்குள்ளும் உட்பிரிவுகள் பெருகின. சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கு இந்தச் சாதிப் பிரிவினை முக்கிய காரணம் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

வேதியர்கள் சமூக ஏணியின் மேல் மட்டத்தில் வைக்கப்பட்டனர். கோயில்களிலும் வேதக் கல்வி பாடசாலைகளிலும் தனியுரிமை உடையவர்களாக விளங்கினர். இதனால் அவர்களது நிலை மேலும் உயர்ந்தது. அரச செலவில் வேதவிருத்தி, பட்டவிருத்தி, பாதரவிருத்தி, புராணவிருத்தி போன்ற பட்டங்களும், தானங்களும் அவர்களது வசதிகளை மேலும் மேலும் பெருக்கின. (தமிழக வரலாறும் பண்பாடும் - பக்கம் 300-301)

பக்தி இயக்க காலத்தில் (7ம் 8ம் நூற்றாண்டு) இறை வழிபாடு தமிழிலேயே நடைபெற்றது. "அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் சொற்றமிழில் எனைப் பாடுக" என சுந்தரமூர்த்தி நாயனாரை சிவன் கேட்டதாக சேக்கிழார் தாம் எழுதிய பெரிய புராணத்தில் குறிப்பிடுகிறார். அது மட்டுமல்ல கடவுள் வழிபாடு அடியார்களால் நேரடியாகச் செய்யப்பட்டது. "நீரொடு பூ சுமந்தேத்தி புகுவார் பின்பு புகுவேன்" என்ற நாவுக்கரசர் தேவாரம் அதனை உறுதி செய்கிறது.

சமயத் துறையில் வேதங்களும் உபநிடதங்களும் ஆறங்கங்களும் சுருதிமிருதிகளும் புராண இதிகாசங்களும் வட மொழியிலேயே எடுக்கப்பட்டன. தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் நீதி முறைகளையும் சமயநூல் வகைகளையும் எடுத்துரைக்கும் தமிழ் நூல்கள் அருகின. செந்தமிழ் இருந்த இந்த நிலை ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் முதலியோர் தோன்றும் வரை நீடித்தது. (சைவ இலக்கியச் சோலை - பக்கம் 42)

கி.பி. 7ம் நூற்றாண்டில் நாளும் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் 8ம் நூற்றாண்டில் சுந்தரரும் 9ம் நூற்றாண்டில் மாணிக்கவாசகரும் தாங்கள் பாடிய தேவாரம், திருவாசகம் ஊடாக தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினர். இவர்கள் இறை பக்தியோடு தமிழ்ப் பற்றையும் ஊட்டி வளர்த்தார்கள். இவர்களில் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் திருஞானசம்பந்தர்" என சுந்தரர் ஞானசம்பந்தரைப் போற்றுவதைப் பார்க்கிறோம்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என அப்பர் தமிழ்மொழி மீது தனக்கு இருந்த காதலை வெளிப்படுத்துகிறார்.

ஆழ்வார்களின் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் தமிழின் இலக்கிய வளத்திற்கு அரண் சேர்க்கின்றது. தமிழ் இனிமையையும் நீர்மையையும் உடைத்தது என்பதற்கு சான்றாக நாலாயிர திவ்விய பிரபந்தம் திகழுகின்றதென்றால் அது மிகையல்ல.

வடமொழியின் மீது ஆழ்வார்களுக்கு மிகுந்த ஈடுபாடும் மதிப்பும் உண்டு.. அதே நேரத்தில் தமிழின் மீது அவர்கள் கொண்ட காதலும், ஈடுபாடும் அதைவிட உயர்ந்து காணப்படுகிறது. செந்தமிழின் முழு வடிவமாகவே அவர்கள் திருமாலைக் கண்டு அனுபவித்துப் பாடினார்கள்.

(மறுபக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R&S Auto Sales

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபவம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS



ON THE SPOT
FINANCING

4362 Sheppard Ave. East
at Brimley

Tel: 416 412 3838

## சங்க காலம்

"செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி" என்ற அடி திருநெடுந்தாண்டகத்தில் உள்ளது. இதன் பொருள் திருமால் தமிழிசையாகவும் வடசொல்லாகவும் உள்ளான் என்பது. தமிழ் முதலில் சொல்லப்பட்டு வடமொழி பின்னர் சொல்லப்படுவது கவனிக்கத்தக்கது. மேலும் தமிழ் என்று சொல்லும் போது ஓசை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். வடமொழி என்று சொல்லும் போது வெறுமனே வடசொல் என்கிறார்.

வடமொழியிலுள்ள வேதங்களைப் புரிந்து கொள்வதற்கு ஆழ்வார்களின் ஈரத் தமிழ்ப் பாசுரங்கள் ஒன்றே போதும் என வேதாந்த தேசிகர் பாடுகிறார்.

"செய்ய தமிழ் மாலைகள் தெளிய ஓதி
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோம்"

"செந்திறத்த என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருள். இனிய தமிழ் என்பது முரட்டு சமஸ்கிருதம் என்பதற்கு மாறுபட்டது." இவ்வாறு "தமிழ் இலக்கியங்களில் வைணவம்" என்ற நூலில் இந்திரா பார்த்தசாரதி எழுதியிருக்கிறார்.

சங்க காலம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலம். சாதி சமயம் (நிறுவன சமயம்) கால்கொள்ளாத காலம். ஆடவர் போலவே பெண்டிரும் கல்வி கற்று பாடல் இயற்றிய காலம். அதுமட்டுமல்ல நாடாளும் அரசர்களும் கவி பாடிய காலம்.

சங்க கால மன்னர்கள் புலவர்களை போற்றியதால் இயற்றமிழ் வளர்ந்தது. பாணர்களை ஆதரித்ததால் இசைத் தமிழ் வளர்ந்தது. கூத்தர்கள் நாடகத் தமிழை வளர்த்தனர்.

சங்க காலத்தில் புலவர்களாலும் மன்னர்களாலும் தமிழ் போற்றி வளர்க்கப்பட்டது. சங்க காலம் தமிழ் தன்னேரில்லா தமிழ், செந்தமிழ், பைந்தமிழ் எனப் போற்றப்பட்ட காலம். கடவுள் பெயரால் ஒருவர் குடுமியை மற்றவர் பிடித்துச் சண்டையிட்டுக் கொள்ளாத காலம்.

சங்க இலக்கியம் அன்பு, அறம், ஈகை போன்ற மனித விழுமியங்களை வற்புறுத்தியது. வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழியைக் காட்டியது. உலகிற்கு வழிகாட்டக் கூடிய தகுதி பெற்றிருந்தது.

தமிழ் அரசர்கள் தமிழர்களை ஆண்டார்கள். தமிழ்மொழி பொதுமக்கள் மொழியாகவும் புலவர்கள் மொழியாகவும் அரச மொழியாகவும் இருந்தது. தமிழ்மொழி அறியாத பிற இன மன்னர்கள் ஆட்சி செய்யாத காலம்.

சங்க காலத்தில் "நாம் தமிழர், நமது மொழி தமிழ், நமது பண்பாடு தமிழ்ப் பண்பாடு" என்ற மனவுணர்வு (consciousness) அழுத்தமாகப் பதிந்திருந்தது.

சுருங்கச் சொன்னால் தமிழின் வாழ்வும் தமிழரின் வாழ்வும் உச்சத்தில் இருந்த காலம் சங்க காலமே.
(வளரும்)

---

## கண்களைக் காக்க!

இலகுவில் காய்கறிகள், பழங்கள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய இரு சத்துக்களான Lutein, Zeaxanthin என்பனவற்றை நமது உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் வயது கூடுவதன் காரணமாக கண் தசைகளில் ஏற்படும் மாற்றங்களையும், கற்றராக் வருவதையும் குறைக்கலாம் என ஆய்வறிக்கைகள் கூறுவதாக கல்கரியைச் சேர்ந்த உணவு நிபுணர் Sarah McHenna கூறுகின்றார்.

கடும் பச்சை காய்கறிகள், மஞ்சள், ஆரஞ்சு நிற காய்கறிகள் பழங்கள் போன்றவற்றில் இச்சத்துகள் அதிகளவில் காணப்படுகின்றது. உதாரணமாக கீரை, கேல் இலை, சிறு கோவா (brussels sprouts), கிவி பழம், மாம்பழம், புறான் பழம், மெலன் பழம், பூசணி வகைகள், புறோக்கோலி, திராட்சை, பச்சை பீன்ஸ், அவரை, ஆரஞ்ச் பழம், பீச் பழம், இனிப்பு உருளைக்கிழங்கு, கரும் பச்சை லெற்றியூஸ் போன்றவற்றை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ளல் நலம். இவற்றை முடிந்தளவில் பச்சையாகவோ, அரையவியலாகவோ சாப்பிடல் அதிக நன்மையளிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கட்

# இந்தியா அபார வெற்றி

தென்னாபிரிக்காவில் நடந்த முதலாவது 20 ஓவர் உலகக் கோப்பைப் போட்டியில், டோனி தலைமையிலான இளம் இந்திய அணி சாம்பியன் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளது.

பரபரப்பான இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுடன் மோதிய இந்தியா 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று கோப்பையைக் கைப்பற்றியது. ஜோகன்னஸ்பர்க் வாண்டரர்ஸ் மைதானத்தில் கடந்த மாதம் 24ம் திகதி நடந்த இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்துக் களமிறங்கிய பாகிஸ்தான், முதல் ஓவரிலேயே ஹபீஸ் விக்கெட்டை இழந்தது. ஆனால், இம்ரான் நசீர் மின்னல் வேகத்தில் அடிக்க, பாகிஸ்தானின் ஓட்ட வேகம் உயர்ந்தது. 10 ஓவர் முடிவில் பாகிஸ்தான் 4 விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்கள் எடுத்திருந்தது. வெற்றி யாருக்கு என்பதில் பெரும் பரபரப்பு ஏற்படத் தொடங்கியது.

பதான் வீசிய 12வது ஓவரில் அடுத்தடுத்து 2 விக்கெட்டுகள் விழ, இந்தியாவின் பக்கம் வெற்றி திரும்பியது. 15 ஓவரின் முடிவில் பாகிஸ்தான் 6 விக்கெட் இழப்புக்கு 101 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 30 பந்தில் 58 ஓட்டங்கள் எடுக்க வேண்டும்.

இந்தியா வெற்றி பெற்று விடும் என்ற நம்பிக்கையை தகர்க்கும் வகையில், ஹர்பஜன் வீசிய ஓவரில் 3 சிக்சர்களை மிஷ்பா உல் ஹக் அடித்தார். இனி மிகுதி 3 ஓவரில் 35 ஓட்டங்கள் எடுக்க வேண்டும்.

18வது ஓவரை ஸ்ரீசாந்த் வீசினார். இதில் 2 சிக்சர் அடித்த தன்வீர், கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார். 12 பந்தில் 20 ஓட்டங்கள் தேவை. இந்தியாவுக்கு தேவை இரண்டே இரண்டு விக்கெட்டுகள். ரசிகர்களின் இதயம் மின்னல் வேகத்தில் துடிக்க ஆரம்பித்தது. 19வது ஓவரை ஆர்.பி.சிங் வீசினார்.

முதல் 4 பந்தில் 3 ஓட்டங்கள் மட்டுமே பாகிஸ்தான் எடுத்தது. 5வது பந்தில் உமர் குல் அவுட் ஆனார். ஆனால், 6வது பந்தில் கடைசி விக்கெட்டை ஆர்.பி.சிங் வீழ்த்துவார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஸ்லிப் திசையில் பவுண்டரிக்கு அது பறந்தது.

கடைசி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஜோகிந்தர் வீசிய முதல் பந்து வைடாக அமைய ரசிகர்கள் மனது திக் திக். அடுத்த பந்தில் ஓட்டம் இல்லை. 2வது பந்தில் மிஷாபா சிக்சர் அடிக்க, ரசிகர்களுக்கு ரத்தம் தலைக்கேறியது. 3வது பந்தை வீசினார் ஜோகிந்தர். விக்கெட் கீப்பருக்கு பின்னால் தூக்கி அடித்தார் மிஸ்பா. அங்கு காத்திருந்த ஸ்ரீசாந்த் கேட்ச் பிடிக்க, ரசிகர்களின் உற்சாகத்தில் மைதானமே அதிர்ந்தது.

19.3 ஓவரில் 152 ஓட்டங்கள் எடுத்து எல்லா விக்கெட்டுகளையும் இழந்தது. கடைசி ஓவர் வரை வெற்றி வாய்ப்பு இரு அணிகளுக்கும் மாறி மாறி கண்ணாமூச்சி ஆடியது. நாடு முழுவதும் இந்தப் போட்டியை பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள், இந்தியா வெற்றி பெற்றவுடன் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தனர். பட்டாசுகள் வெடித்து, தங்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

வெற்றி பெற்றவுடன் இந்திய வீரர்கள் அனைவரும் குதித்து மகிழ்ந்து, ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி வாழ்த்தைப் பகிர்ந்து கொண்டனர். கேப்டன் டோனி, தனது சட்டையைக் கழற்றி, மாவீரனாக வலம் வந்தார். பிறகு, ஒரு சிறுவனுக்கு அந்தச் சட்டையை அணிவித்து மகிழ்ந்தார்.

உலகக் கோப்பையில் பாகிஸ்தானிடம் இதுவரை தோற்றதில்லை என்ற பெருமையை தக்க வைத்துக் கொண்ட இந்திய அணி, உலக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது. குறிப்பாக, அனுபவ வீரர்கள் சச்சின், கங்குலி, டிராவிட் இல்லாத நிலையில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

1983ம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி உலகக் கோப்பையை வென்றது. அதன் பிறகு 24 ஆண்டுகள் கழித்து டோனி தலைமை மகத்தான சாதனை படைத்துள்ளது.


**P. Kayilasanathan**

B.A. (Cey) LLB (Cey)

**BARRISTER & SOLICITOR**



குற்றவியல்
வழக்குகள்,
அகதிநிலை
விசாரணைகள்,
மனிதாபிமான
விண்ணப்பங்கள்,
வீடு, வியாபார
ஸ்தாபனங்கள்
வாங்குதல் - விற்றல்,
குடும்ப வழக்குகள்,
வாகன விபத்து
நஷ்டஈடு கோருதல்.

**பொ. கயிலாசநாதன்**

கனடிய பரிஸ்டர்

2401 Eglinton Av. E. Suite #302
(Eglinton / Kennedy)
Scarborough ON M1R 2M5

**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Children's Education Trust of Canada

offered to the public by

## Children's Education Funds Inc.



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற

சிவா
கணபதிப்பிள்ளை

அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

## NLR ACCOUNTING AND TAX SOLUTIONS

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location

2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR



"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

**"Honesty, Integrity, Professionalism"**

**சாள்ஸ் தேவசகாயம் M.A**
Sales Representative
**Direct: 416-284-5555**
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED



Graphic Land - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**
Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும். பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்-கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு
வழக்கறிஞர்
இல்லை

Motor Vehicle Accident
Criminal
வாகன விபத்து!
கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..
உரிய



சட்ட
ஆலோசனைகளுக்கு
கலகலப்பு தீசன்
416-803-5296
WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Elect

# Markham - Unionville

# Ki Kit Li

**John Tory's Team** — **PC Party**

PC

***For a Better Ontario***
***Leadership Matters***

மார்க்கம் - யூனியன்வில் தொகுதி வாழ்
தமிழ் மக்களுக்கு
ஒரு அன்பான வேண்டுகோள்

உங்கள் தேவை - எனது சேவை

தயவு செய்து
உங்கள் வாக்குகளை எனக்கு
அளியுங்கள்
அன்புடன் **K. K. Li**

**www.kkli.ca**






**4568 Hwy 7E - Unit 5, Unionville, ON L3R 1M5**
**Tel: 647-835-9110**
**www.kkli.ca**

AUTHORIZED BY CFO FOR MARKHAM - UNIONVILLE
PROV. PC ASSOC.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக்கான தொகுதி
வெற்றிக்கான வேட்பாளர்
வெற்றிக்கான தெரிவு



நீதன் சண்

☒ **Neethan Shan**

**Scarborough Guildwood Ontario**
**New Democratic Party Candidate**

ஒக்டோபர் 10ம் நாள்
அனைவரும் இணைந்து
வரலாறு படைப்போம்!

3228 Eglinton Ave. Unit - 3
(Markham & Eglinton)

416-267-3434

**www.neethanshan.ca**

* Authorized by CFO for Scarborough Guildwood ONDP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S.M.S.F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR

D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO

B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org